பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்
JAFFNA PUBLIC LIBRARY
PERIODICAL
JAFFNA PUBLIC LIBRARY

ISSN 1391-9504

# Vijey விஜய் விஜய்

13.07.2016 - மலர் 13, இதழ் 20



## மாமிசம் உண்ணும் தாவரங்கள்

## தனிநாயகம் அடிகளார்




## 'மினி ஐ பி எல்' போட்டிகள் விரைவில்

MINI IPL



## தடிமனா? கவனம் தேவை!




## நான் ஈ

ஈக்களின் வாழ்க்கை வட்டம்

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இங்கு உள்ளவை எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றன?

1. முக்கோணிகள் 2. உருளைகள்
3. சதுரமுகிகள்

2. இந்த அடுக்கில் ஆகவும் மேலே உள்ளவற்றின் நிறங்களை ஆங்கிலத்தில் குறிப்பிடுங்கள்.

............................................................



3. கூடுதலாக உள்ள நிறங்கள் யாவை?

............................................................

4. இந்த வடிவத்தில் வீட்டில் காணக் கூடிய பொருட்கள் 2 தருக.

............................................................



1. இந்தப் படம் குறிப்பது;

1. போக்குவரத்துச் சாலை மற்றும் சாலையோரக் காட்சி
2. மோட்டார் வாகனக் கண்காட்சி
3. புகையிரத நிலையக் காட்சி

2. படத்தில் காணப்படும் விற்பனை நிலையம் யாது?

1. புத்தகக் கடை 2. பழக்கடை
3. இறைச்சிக் கடை



3. இங்குள்ள வாகனங்கள் எத்தனை?

............................................................

4. வாகன நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கு உதவுபவை எவை?

1. வாகனங்கள் 2. பாதசாரிகள் கடவை 3. சமிக்ஞை விளக்குகள்

1. மாலாவின் வீட்டின் ............................ இதுவாகும்.

1. படுக்கையறை 2. குளியல் அறை
3. வரவேற்பறை



2. இங்கு காணப்படும் தளபாடங்கள் சிலவற்றைக் குறிப்பிடுங்கள்.

............................................................

3. உங்கள் வீட்டின் இப்பகுதியை அழகுபடுத்துவதற்காகப் பயன்படுத்தியுள்ள சில பொருட்களைக் குறிப்பிடுங்கள்.

............................................................



1. ஜோன் வகுப்புக்குச் ....................... (செல்லும்/ செல்கின்றான்)



2. ....................... அழகான பையொன்று உள்ளது. (அவனிடம்/ அவளிடம்)



3. இவர் ஒரு ....................... (மருத்துவர்/ வழக்கறிஞர்)

-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்சிந்தனைகளைக் கடைப்பிடித்து நோய்களிலிருந்து விடுபடுவோம்!



மனிதர்களாகப் பிறந்தவர்கள் அனைவரும் நோய் வாய்ப்படுவது என்பது பொதுவானதே. துரிதமாக குணமாகும் நோய்கள், சில காலம் வரை நீடிக்கும் நோய்கள் மற்றும் தீராத நோய்கள் என்று நோய்களை வகைப்படுத்திக் கொள்ள முடியும். உடல் நோய்கள், மன நோய்கள் என்றும் நோய்களை வேறுபடுத்திக் கொள்ளலாம். இவற்றுள் ஒரு சில உடல் சார்ந்த நோய்களுக்கு உளவியல் ரீதியிலான பிரச்சினைகள் காரணமாக அமைகின்றன. இவை எவையாயினும் சரியான மருத்துவ சிகிச்சைகளே நோயைக் குணப்படுத்தக்கூடியன. மருத்துவ சிகிச்சைகள் ஒரு பக்கம் இருந்தாலும், சிலர் நோய்கள் குணமடைவதற்காக மத ரீதியிலான சடங்குகளை மேற்கொள்வதையும் அவதானித்திருப்பீர்கள்.

சிலர் சோதிடம் பார்ப்பவர்களை அணுகி பரிகாரங்களை செய்கின்றனர். இதற்காக பணத்தினையும் செலவு செய்கின்றனர். இவ்வாறான வழிமுறைகளை நாடுவோர் நேரத்தினையும் பணத்தினையும் விரயம் செய்து மேலும் துன்பத்திற்குள் தள்ளப்படுகின்றனர்.


விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652


தற்போது காணப்படும் பல நோய்களுக்கு மன ரீதியிலான பாதிப்புகளே காரணமாக அமைகின்றன. மனக் குழப்பங்கள், மன அழுத்தம் என்பன நோய்களுக்கு காரணமாக அமைகின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது. பேராசை, பொறாமை, குரோத உணர்வு, அவமானம், பழிவாங்கும் உணர்ச்சி என்பன உடலியல் நோய்களுக்கு காரணமாக அமைகின்றன. இதனைப் பலரும் அறியாதிருக்கின்றனர். இவ்வாறான தவறான எண்ணங்களை மனதிலிருந்து அகற்றிக்கொண்டால், நோய்கள் விரைவாகக் குணமடைவதனைக் காணலாம்.

மனதினை நற்சிந்தனைகளினால் நிரப்பிக்கொள்ளும் போது, உறுப்புகள் சிறந்த முறையில் இயங்க ஆரம்பிக்கின்றன. இரத்த ஓட்டம் சீரடைகின்றது. மனதில் ஏற்படும் அமைதி நிலையே இதற்கு காரணமாகும். இதனால், படிப்படியாக ஆரோக்கியம் அடைவதனை உணர முடியும். மேலும், நோயாளிகளுக்காக மேற்கொள்ளப்படும் கூட்டுப் பிரார்த்தனைகளும் பலன் அளிப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறு மற்றவர்களின் நலன்களுக்காக செய்யப்படும் பிரார்த்தனைகளினால் உள அமைதி ஏற்படுகின்றது. நோயாளிகளை தனிமைப்படுத்தாமல் உடன் இருந்து கவனித்துக் கொள்ளல், அவர்கள் மகிழ்ச்சிப்படும் விதத்தில் செயற்படுதல் என்பன நோய் குணமடைவதனை விரைவுபடுத்தும் செயற்பாடுகளாகும்.






## நோயாளிகள் மீதான கருணை

நோயாளிகள் மீது காட்டப்படும் கருணை அவர்களை விரைவாகக் குணப்படுத்துகின்றது. அன்பாகப் பேசுதல், கருணையுடன் நோயாளிகளை கவனித்தல், குணமடைவதற்கான நம்பிக்கை வார்த்தைகளைப் பேசுதல், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப உதவுதல் என்பன நோயாளிகளுக்கு மகிழ்ச்சியினை ஏற்படுத்தும். நோயாளிகளின் மனதில் அமைதியையும் உத்வேகத்தினையும் ஏற்படுத்துவது சிறந்தவொரு காரியமாகும். இதனால் நோயாளி ஓரளவேனும் குணமடைய வாய்ப்புகள் உண்டு.

எனவே, குடும்பத்தார், அயலவர்கள், நண்பர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தால் அவர்களுக்கு உதவத் தயங்காதீர்கள். ஏனெனில், நாளைய பொழுதில் நீங்கள்கூட நோயுற்றால் அடுத்தவர்களின் உதவிகளை எதிர்பார்க்கும் நிலை ஏற்படலாம் என்பதனை உணர்ந்துகொள்ளுங்கள். அதற்கேற்ப செயற்படுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவி



பாடசாலையில் சாதாரண தரத்தில் நன்றாகப் படித்துக்கொண்டிருந்த செல்வாவின் பெற்றோர் திடீர் விபத்தால் முடங்கி விட்டார்கள். செல்வாவிற்கு அவர்களை பாதுகாக்கும் பெரிய கடமையும், தொடர்ந்து படிக்க வேண்டும் என்ற எண்ணமும் இருந்ததால் பக்கத்து வீட்டுப் பாட்டியுடன் காட்டில் விறகுகளை எடுத்து வந்து விற்று வந்தான். அந்த வருமானத்தில்தான் தாய், தந்தை ஆகியோருக்கு மருத்துவச் செலவுகளை செய்துவிட்டு, மிகுதிப் பணத்தில் தன் கல்வி நடவடிக்கைகளை மிகவும் கஷ்டத்தின் மத்தியில் மேற்கொண்டான்.

தினமும் காலையும் மாலையும் விறகுகளை சேகரிக்கச் சென்ற செல்வா, ஒருநாள்.... காய்ந்த மரக்கிளைகளை சிரமத்துடன் அரிவாளால் வெட்டிக்கொண்டிருந்தான். அப்போது செல்வாவை நோக்கி "ஏன் மரத்தை வெட்டுகிறாய் வெட்டாதே நிறுத்து" என்று ஓர் அசரீரிக் குரல் கேட்டது. அக்குரலைக் கேட்ட செல்வா தைரியமாக "யாரது என்னைத் தடுப்பது?" என்று கேட்டான். நான் இந்த மரத்தில் நீண்டகாலமாக மகிழ்வுடன் வாழ்ந்து வருகின்றேன். அதனால் இந்த மரத்தை சேதப்படுத்தாதே என்று அந்த அசரீரிக் குரல் மீண்டும் தடுத்தது. செல்வாவும் "என்னை தடுக்காதே. இந்த கிளைகளை வெட்டி விற்றால் தான் என் பெற்றோரை நான் காப்பாற்ற முடியும் என் படிப்பையும் மேற்கொள்ள முடியும்" என்று அந்த அசரீரிக் குரலிடம் கூறினான்.

"உன் எண்ணம் உயர்ந்தது தான். இருந்தாலும், மரத்தை வெட்டாதே. நான் என்னால் முடிந்த உதவியை உனக்குச் செய்கிறேன். மரத்தை மட்டும் வெட்டாதே" என்றது அசரீரிக் குரல். "உன்னால் எனக்கு எப்படி உதவி செய்ய முடியும்? உன்னை எப்படி நான் நம்புவது?" என செல்வா கேட்டான். "நீ பெரிய கிளையை வெட்டி மரத்தை சேதப்படுத்த வேண்டாம். நானே வாரம் ஒரு கிளையை பட்டுப்போகச் செய்து, நீ விறகு சேகரிக்க வசதி செய்து தருகிறேன். நீ வாரத்திற்கு ஒரு நாள் மட்டும் வா" என்றது அசரீரி.

"சரி. உன் வாக்கை நம்பி மரத்தை வெட்டாமல் விட்டுச் செல்கிறேன். நான் அடுத்த விடுமுறைக்கு வரும்போது, எனக்கு காய்ந்த கிளைகள் வேண்டும். நான் போய் வருகிறேன்" என்று கூறி சென்றான் செல்வா. "சரி போய் வா, உன் லட்சியம் வெற்றியடைய வாழ்த்துக்கள்" செல்வாவை வாழ்த்தியது அசரீரி.

அடுத்த விடுமுறையில் காட்டிற்குச் சென்ற செல்வா, அந்த மரத்தின் அருகே பல காய்ந்த கிளைகள் கிடப்பதைக் கண்டான். அதனை சேகரித்த செல்வா அந்த அசரீரிக் குரலுக்கு நன்றி சொன்னான். இவ்வாறே, தொடர்ந்து வாரம்தோறும், இதுபோல் காய்ந்த கிளைகள் அங்கே குவிந்து கிடக்கும். அதனை சேகரித்து வீட்டுக்கு கொண்டுசென்று விற்று நன்றாகப் படித்து அரசு வேலைக்குச் சென்று பெற்றோரைக் காப்பாற்றினான் செல்வா.

# பாசம்

தரம் நான்கில் கற்பவன்தான் பாபு. அவன் பள்ளி வாயிலில் பாட்டி ஒருவர் மிட்டாய் விற்று வந்தாள். தினமும் பாபு பாடசாலை முடிந்ததும் அந்த பாட்டியிடம் மிட்டாய் வாங்கிக்கொண்டு அவளுடன் பேசிவிட்டு வீடு திரும்புவதை வழக்கமாகக் கொண்டிருந்தான். பாட்டியும் பாபுவுடன் அன்போடு பழகி வந்தாள். ஒருநாள் பாபு பள்ளிக்கு வரவில்லை. பாபுவை எதிர்பார்த்த பாட்டி ஏமாந்துபோனாள். மறுநாள் பாபுவைக் கண்ட பாட்டி மகிழ்ந்தாள். அப்போது பாபு பாட்டிக்கு இனிப்பு வழங்கினான்.

"இனிப்பு எதற்கு?" என பாட்டி கேட்டாள். "நேற்று எனக்கு பிறந்தநாள் அதுதான் பள்ளிக்குக் கூட வரவில்லை" என்று கூறினான் பாபு. அதற்கு பாட்டி "நேற்று என் பேரனுக்கும் பிறந்தநாள் தம்பி" என கண்ணீருடன் கூறினாள் பாட்டி பாபுவிடம். "உங்க பேரன் எங்கே பாட்டி? நேற்று உங்களைப் பார்க்க வந்தானா?" என கேட்டான் பாபு. "இல்லை பாபு, என் பேரனையும் மகனையும் நான் மிக நீண்ட காலம் பிரிந்து வாழ்கிறேன். என் மருமகளுக்கு என்னைப் பிடிக்கவில்லை. அதுதான் நான் இங்க வந்துட்டேன்" என கண்ணீர் மல்கக் கூறினாள் பாட்டி.

"உங்க பேரன் பெயர் என்ன? உங்கள் மகன், மருமகள் எல்லாம் எங்கு இருக்கிறார்கள்?" என்று பரிதாபத்துடன் கேட்டான் பாபு. "என் பேரன் பெயரும் பாபுதான். என் மருமகள் பெயர் சீதா. பக்கத்து ஊரில்தான் இருக்கிறார்கள். ஆனால் நான் அவர்களை பார்க்கப் போவதில்லை என்றாள்". அந்த பாட்டி தன் பெயரையும் தன் அம்மாவின் பெயரையும் சொல்வதைக் கேட்டு அதிர்ந்துபோனான் பாபு. கைக் குழந்தையாக இருந்தபோதே பாட்டியை வெளியே அனுப்பி விட்டதால் பாட்டிக்கு தன் பேரனை அடையாளம் தெரியவில்லைப் போல. இதனை இப்படியே விடக் கூடாது. பெரும் பாவத்தைப் புரிந்த அம்மாவிற்கு இதனைப் புரிய வைக்க நல்ல பாடம் கற்றுக்கொடுக்க வேண்டும் என்று எண்ணினான் பாபு- மறுநாள் பள்ளிக்குப் போன பாபு "பாட்டி நான் இன்று உங்களுடன் தங்குகிறேன். எங்கள் வீட்டில் சொல்லிவிட்டு வந்துவிட்டேன்" என்று பாட்டியுடன் தங்கிக் கொண்டான் பாபு. பள்ளியில் இருந்து திரும்பி வராத பாபுவை அவனது பெற்றோர் எல்லா இடங்களிலும் தேடினார்கள்.




அதுமட்டுமன்றி, காவல் நிலையத்திலும் முறைப்பாடு செய்தனர். அவனது அம்மா அன்று சாப்பிடாமல் மகனை எண்ணி வருந்தினாள். மறுநாள் பாட்டியுடன் வீட்டுக்குச் சென்ற பாபுவைக் கண்ட சீதா, கண்ணீருடன் பாபுவை கட்டித் தழுவி முத்தமிட்டாள். "உன்னைக் காணாமல் என் உயிரே போய் விட்டது" என்று அழுதாள் சீதா.

"உன்னைப் போலத்தானே அம்மா இந்தப் பாட்டியும். அவங்க மகனையும் பேரனையும் காணாது கவலைப்பட்டு இருப்பாங்க. ஏம்மா இவங்களை வீட்டை விட்டு விரட்டினீங்க" என்று கேட்டான் பாபு. பதில் கூற முடியாது திகைத்தாள் சீதா" இப்போதுதான் பிரிவின் வலியை நான் புரிந்து கொண்டேன் பாபு, இனி இந்த தவறை செய்யமாட்டேன் என பாபுவின் கன்னத்தில் முத்தமிட்ட சீதா பாபுவின் பாட்டியிடம் மன்னிப்புக் கேட்டு அனைவரும் ஒன்றாக வாழ்ந்து மகிழ்ந்தனர்.

விரைவில்
சீக்ரட் சிக்ஸ்
இரகசிய குழு
தொடர்கதை
மர்ம ஒளி பரப்பியது
செவ்வாய்க்கிரக மனிதர்களா....?
உண்மையை கண்டறிய
களம் இறங்கிய இரகசிய குழு
எதிர்பாருங்கள்...


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# பாதங்களை வரைவோம்



★ முதலில், எமக்குத் தெரிகின்ற விதத்திற்கேற்ப பாதங்களை மேலோட்டமாக வரைந்துகொள்ளுங்கள்.

★ இரண்டாவதாக, மேலோட்டமாக வரைந்த பாதங்களை சற்று சரிப்படுத்தி, அதில் ஐந்து விரல்களையும் வேறுபடுத்திக்கொள்ளுங்கள்.




★ மூன்றாவதாக, பாதங்களை மேலும் சரிப் படுத்தி விரல்களையும் ஏனைய பாகங்களையும் உண்மையான பாதங்களின் தோற்ற அமைப்புக் கேற்ப மேம்படுத்திக்கொள்ளுங்கள்.

படமொன்றை வரைந்த பின்னர் அது முழுமை பெறுவதற்கு வெளிச்சம் கிடைக்கும் திசையை தீர்மானிப்பது அவசியமாகின்றது. அதன்படி, பாதத்தின் எதிர்ப்புறமாக இருண்டிருக்கும் வகையிலும், அந்த இருண்ட நிலை படிப்படியாக முன்னோக்கிச் செல்லும்போது வெளிச்சம் கிடைக்கும் வகையில் இளம் நிற மாகும் வரை நிறத்தைக் குறைத்துக்கொள்ளுங்கள்.

பாதங்களை வரைந்து பயிற்சி பெறுவதற்காக முதலில் உங்கள் பாதத்தையும் உங்களுக்கு முன்னால் இருப்பவரின் பாதத்தினையும் வரைந்து பயிற்சி பெறுங்கள். ஏதேனுமொன்றை வரையும்போது, அதன் தோற்ற அமைப்பினை நன்கு ஞாபகப்படுத்தி வரைய முயற்சியுங்கள்.

## பொது நியதி

பொதுவாக, சித்திர மொன்றை வரையும்போது, பென்சிலை மிகவும் கீழ்ப் பகுதியில் பிடிக்காமல், சற்று நடுப்பகுதியில் பிடித்து வரையப் பழகுங்கள். அப்பொழுதுதான் சித்திர மொன்றை வரையும்போது தேவைக்கேற்ப கையை நகர்த்துவது இலகுவாக இருக்கும். அத்துடன்,




பென்சிலை அழுத்தமாகப் பிடித்து வரைய வேண் டாம். முதலில் பென்சிலை லாவகமா கப் பிடித்து படத்தை லேசாக வரைந்துகொள் ளுங்கள். அதன் பின்னர் பென்சிலை சற்று அழுத்திப் படத்தை தெளிவாக வரையுங்கள்.

செலிங்கோ லை.:.ப்
பிரணாம
★ வீரர்கள் ★

செலிங்கோ லை.:.ப் உடன் வெற்றி
பெறுவதற்கான வரத்தை
உங்கள் பிள்ளைக்கும் பெற்றுக்கொடுங்கள்

இம் முறை 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு உங்கள் பிள்ளை
தோற்றுவதாயின், எங்களுடன் பதிவு செய்து
விஷேட வரப்பிரசாதங்களை பெற்றுக்கொடுங்கள்.

5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் அனைத்து பிள்ளைகளுக்கும்
செலிங்கோ லை.:.ப் இடமிருந்து பெறுமதிமிக்க சான்றிதழ்.

செலிங்கோ லை.:.ப் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றை பெற்றுக்கொள்பவர்களின்
பிள்ளைகளுக்கு விஷேட பரிசுகள்.

அகில இலங்கையில் அதிகூடிய புள்ளிகளை பெற்றுக்கொள்ளும் 10* மாணவர்களுள் ஒருவராக
உங்கள் பிள்ளையும் இருப்பின் அவருக்கு கல்வியை தொடர்வதற்காக ரூ. 50,000 வரை
புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

பதிவு செய்வதற்கு அல்லது மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அழையுங்கள்
(011) 2 461 461 இல்லையெனில் அருகிலுள்ள செலிங்கோ லை.:.ப் கிளைக்கு செல்லுங்கள்.

வாழ்க்கை, பாசம், பாதுகாப்பு.






செலிங்கோ லை.:.ப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் தொல்லை தரும் உயிரினமாக ஈக்கள் இருந்தபோதும் சூழல் தொகுதிக்கு மிகவும் அவசியமான ஓர் உயிரினமாகவே இவை உள்ளன. இவை சேதனப்பொருட்களின் மீள் சுழற்சிக்கு மிக முக்கியமானதோர் கடமையை மேற்கொள்கின்றன. மிக வேகமாகப் பறக்கும் திறன் கொண்ட, இந்த உயிரினத்தில் சுமார் 90,000 வகைகள் உள்ளன. இவற்றில் ஏறக்குறைய 75,000 வகைகள் ஒரு சோடி சிறகுகளைக் கொண்ட 'டிப்டெரா' வம்சத்திற்குரியவை.











இவை நாள் முழுவதும் உணவுகளை உட்கொள்கின்றன. அத்துடன் மனித மற்றும் விலங்குகளின் மலசலம், துர்நாற்றம் என்பனவற்றை பெரிதும் விரும்புகின்றன. இவற்றின் கால் அடிப்பாதங்களில் ஒருவகை பசைத்தன்மையை கொண்டுள்ளன. எனவே, இவை மனிதன் மற்றும் விலங்குகளின் மலசலம், அழுக்குகள் போன்றனமீது அமரும்போது அவற்றின் கிருமிகள் இந்த கால் பசையில் ஒட்டுகின்றன. மீண்டும் இவை உணவுகள்மீது அமரும்போது அந்த நோய்க்கிருமிகள் உணவுகளில் ஒட்டிக்கொள்கின்றன. இது பெரும்பாலும் மனிதருக்கு ஆபத்தாகவே அமைந்துவிடுகிறது.




## ஈயின் உடல்

ஈயின் உடலை மூன்று பிரதான பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

**தலை:** உணவை உறிஞ்சிக் குடிக்கும் பகுதி மற்றும் பெரியதும் வினைத்திறன் கொண்டதுமான கண்கள் ஈயின் தலைப் பகுதியில் அமைந்துள்ளது. ஈயின் இரு கண்களுக்கு மத்தியில் இரு உணர் கொம்புகள் உள்ளன.

**மார்பு:** ஆறு கால்களும் மெல்லிய தோல்போன்ற சிறகுகளும் மார்புடன் பொருத்தப்பட்டுள்ளன.


**வயிறு:** ஈயின் சுரப்பிகள் பல அதன் வயிற்றுப் பகுதிக்குள்ளேயே அமைந்துள்ளன.

சாம்பல் நிறத்தை உடைய இவற்றின் பின் பகுதி உடலில் கறுப்பு நிறத்தில் நான்கு வரிகள் உள்ளன. ஈயின் உடல் 1/4 அங்குல நீளம் கொண்டது. இதன் கால்களில் அசுத்தங்கள் ஒட்டக்கூடிய சிறிய மென்மையான தட்டுப்போன்ற பகுதிகள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கைச் சக்கரம்

ஈக்களின் வாழ்க்கைச் சக்கரம் காலநிலைக்கேற்ற வாறு மாற்றமடையலாம். வீட்டு பெண் ஈ 10 நாட்களுக்கு ஒருமுறை 100 இற்கு மேற்பட்ட முட்டைகளை அசுத்தமான இடங்களில் இடும். இந்த முட்டை கள் மிகச் சிறிதாகவும் கூட்டா கவும் காணப்படும். ஈக்களின் ஆயுட்காலம் 15 தினங்கள் முதல் 30 தினங்களுக்கு இடைப்பட்டதாகும்.



**குடம்பிப் பருவம்**
ஒருவாரம் கழிந்த பின்னர் கூட்டுப்புழுவானது, உலர்ந்த மணலுக்கு அடியில் சென்று குடம்பி நிலையை அடையும்.

**ஈ பருவம்**
3 அல்லது 4 நாட்கள் அவ்வாறு தரையில் வாழும் குடம்பியானது, பின்னர் முழுமையான ஈயாக மாறி வெளிவரும்.

**முட்டைப் பருவம்**
1-3 நாட்களுக்கு இடையில் முட்டையை உடைத்துக்கொண்டு கூட்டுப்புழுக்கள் வெளிவரும்.

**கூட்டுப்புழுப் பருவம்**
கூட்டுப் புழுக்கள் ஒரு வாரத்திற்குள் முழுமையாக வளர்ச்சி அடையும்.

## ஈக்களின் திறன்கள்

ஒரு மணித்தியாலத்தில் ஈக்களால் 5 மைல் வேகத்தில் பறக்க முடியும். மேலும் கீழு மாகவும் ஒரு பக்கத்தில் இருந்து மறுபக்கமாகவும் பின்நோக்கியும் அவற்றால், பறக்க முடியும். ஈ ஒன்றின் கண்ணில் வெவ்வேறாக அமைந்துள்ள 4,000 வில் லைகள் உள்ளன. அதனால், இவற்றுக்கு எல்லா திசை களும் நன்கு புலப்படும். அத்துடன், வீசும் மணத் தைக் கொண்டே அது உணவை கண்டுபிடிக்கும்.




## ஈ வகைகள்

வீட்டு ஈக்களைத் தவிர ஒரு சோடி சிறகுகளுடன் மேலும், பல வகை ஈக்கள் பெருமளவில் உள்ளன. அவற்றில் ‘மே ஈக்கள்’ எனும் ஒருவகை ஈ குறிப்பிடத்தக்கது.





## உணவு உட்கொள்ளும் விதம்

ஈக்கள், புதிதாக உண்ணப் போகும் உணவின்மீது இறுதி யாக உண்ட உணவை வாந்தி யாக எடுக்கின்றன. இதன்மூலம் புதிய உணவை திரவமாக்கி அதனையே உறிஞ்சிக் குடிக் கின்றன.

இவ்வாறு பழைய உணவை வாந்தி எடுப்பதன்மூலம் அதில் உள்ள கொலரா, வயிற்றோட் டம், காய்ச்சல் உள்ளிட்ட பல நோய்களுக்கான கிருமிகள் புதிய உணவின்மீது பரவுகின்றன.

## உணவுப் பட்டியல்

நுண்ணிய கிருமிகள்
இறைச்சி
தாவரங்கள்
சாணம்
பழுதடைந்த காய்கறிகள், பழ வகைகள் உள்ளிட்ட கழிவுகள்.

## ஈக்களிடம் இருந்து பாதுகாத்துக் கொள்வதாயின்

★ வீட்டில் சேரும் குப்பைகளை எரித்தோ அல்லது குழிதோண்டிப் புதைத்தோ சூழலை சுத்தமாக வைத்திருத்தல்.


★ சமையலறையையும் கழிவறையையும் சுத்தமாக வைத்திருப்பதில் விசேட கவனம் செலுத்துதல்.

★ நோயாளர் ஒருவரின் கழிவுகளை பாதுகாப்பான முறையில் அகற்றி விடுதல்.

★ உணவை தயாரித்த பின்னர் மூடி வைத்தல்.

## பரவும் நோய்கள்

ஈக்கள் பயங்கரமான 100 இற்கும் மேற்பட்ட நோய் கிருமிகளை எடுத்துச் செல்கின்றன. அவற்றுள் வைரஸ், பெக்டீரியா, ப்ரோடொசோவா, புழுக்கள் போன்ற நோய்க் கிருமிகள் ஈக்கள் காரண மாக, மனித னின் உணவி லும் பானத்தி லும் சேர்கின் றன. எனவே, கழிவுப் பொருட் களை அகற்றுவதற்கு சரியான வழிமுறை களை கைக்கொள் ளாதுவிட்டால் ஈக்களால் நோய்கள் பெருமளவில் பரவும் நிலையே காணப்படும்.




(-அ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-I)

பெயர்: ................................................

★ பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ் கீறிடுக.


01. இவ்வடிவத்தின் அடுத்த நிலையைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கீறிடுக.



1. 2. 3.


★ 2 ஆம், 3 ஆம் வினாக்களில் உள்ள முதலாவது படத்தை வேறொரு திசையிலிருந்து பார்க்கும்பொழுது தோன்றும் உருவைத் தெரிவுசெய்து அதன்கீழ் கீறிடுக.

02.




1. 2. 3.

03.




1. 2. 3.

04. கீழே தரப்பட்ட உருவங்களில் முதலில் தரப்பட்ட இரண்டு படங்களுக்கும் உள்ள தொடர்பைப் போல அடுத்து வரும் படத்திற்குப் பொருத்தமான உருவை தெரிக.




1. 2. 3.

05. பின்வரும் உருக்களில் சமச்சீர் அச்சு வரைய முடியாதது எது?



1. 2. 3.

06. இவ்வுருவிலுள்ள செங்கோண முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?



1. 4 2. 5 3. 6

07. நான்கு முகங்களை மட்டும் கொண்ட திண்ம வடிவம் யாது?

1. சதுரமுகி 2. நான்முகி 3. உருளை

08. பின்வரும் தரவை விளங்கி, வினாவுக்கு விடை தருக. வ- என்பதன் பெறுமதி யாது?

| | | | |
|---|---|---|---|
| | க | க | த |
| + | வ | க | த |
| | 9 | 8 | 6 |

1. 5 2. 4 3. 3




09. மொத்த வியாபாரி ஒருவன் மாம்பழங்களை எண்ணி ஒரு கூடையில் இட்டான். 50 மாம்பழங்களுக்கு மேலதிகமாக 1 மாம்பழத்தை இட்டான். அவன் 5 மாம்பழங்களை மேலதிகமாக இட்டால் அவன் கூடையில் இட்ட மொத்த மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?

1. 51 2. 55 3. 255

10. பார ஊர்தி ஒன்றும் கார் ஒன்றும் ஒரே நேரத்தில் ஓர் இடத்தில் இருந்து ஒன்றுக்கொன்று எதிரான திசையில் சென்றன. கார் மணிக்கு 30km மாறா வேகத்திலும், பார ஊர்தி மணிக்கு 20km மாறா வேகத்திலும் சென்றது. $\frac{1}{2}$ மணித்தியாலத்தின் பின் இரண்டு வாகனங்களுக்கும் இடையே உள்ள தூரம் யாது?

1. 25km 2. 50km 3. 10km

11. பரிசளிப்பு விழாவின் நிகழ்வுகள் கீழே தரப்பட்டுள்ளன. அதனை ஒழுங்குபடுத்தும்போது அமையும் சரியான விடையின்கீழ் கீறிடுக.

A. பரிசும் சான்றிதழும் வழங்குதல்
B. நன்றி உரை
C. வரவேற்புரை
D. மங்கள விளக்கேற்றல்
E. சமய வழிபாடு

1. DECAB 2. EDCAB 3. DEACB

12. 'கமல் இட்டுக் கட்டுவதில் கெட்டிக்காரன்' என ஆசிரியர் கூறினார். இங்கு இட்டுக் கட்டுதல் என்பது;

1. அளவு மீறிப் பேசுதல் 2. இல்லாதவற்றைக் கூறுதல்
3. வேறொருவர் கூறியதைக் கூறுதல்

**(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)**

## முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-II)

(ஜூலை 06 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

*01)* **1.** காலி, மாத்தறை, இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை
**2.** வெள்ளப்பெருக்கு, மண்சரிவு
**3.** பாறைகளைத் தகர்த்தல், மண் அகழ்தல்
**4.** நடந்து **5.** மக்கள் **6.** இடி, மின்னல், சுனாமி

*02)* **1.** மருத்துவமனைக்கு **2.** பூணுவோம்

*03)* **1.** இங்கே கதைப் புத்தகம்
**2.** தயவு செய்து மற்றவர்களைப் பற்றியும் சிந்தியுங்கள்

*04)* **1.** நாங்கள் விளையாடச் செல்வோமா?
**2.** தேநீர் குடிக்க வாருங்கள்

*05)* **1.** 2 **2.** 2 **3.** 3 **4.** 3 **5.** 3

*06)* **1.** 50ml **2.** 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஊடக பாடநெறி பாகம் II
பாடம் - 112

# இலங்கை தொலைக்காட்சியில் தமிழ் நிகழ்ச்சிகள்

கல்வித்துறை சார்ந்த விடயங்களை ஒளிபரப்புவதற்கென்றே ஜப்பானிய அரசாங்கத்தினால் ரூபவாஹினி தொலைக்காட்சி நிலையம் அன்பளிப்பாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இருப்பினும்



தமிழ் மொழியிலான ஒளிபரப்புக்கள் போதியளவில் இல்லை என்ற விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டன. நீண்ட காலத்திற்கு மும்மொழி கலந்த ஒளிபரப்பாகவே 'ரூபவாஹினி' தனது ஒளிபரப்பை தொடர்ந்தது.

சில வருடங்கள் சென்றதும் நிகழ்ச்சியின் வடிவங்களும் மாற்றப்பட்டன. நாடகங்கள், சினிமா, பேட்டிகள், இசை நிகழ்ச்சிகள் என பலதும் கலந்த நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகத் தொடங்கின. தேசிய பத்திரிகையொன்றை எடுத்துக் கொண்டால் அதில் செய்தியே முக்கியத்துவம் மிக்கதாக இருப்பதுண்டு. ஆனால், இலங்கையில் 'ரூபவாஹினி' தொலைக்காட்சி சேவையை எடுத்துக் கொண்டால் நாடகங்களே அதில் முதன்மை நிலை அம்சமாக இருந்தது. சில வருடங்களின் பின்னர் தமிழ் அதிகாரிகள் சிலரது அயராத முயற்சியின் காரணமாக, தமிழ் நாடகங்களும் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பாகத் தொடங்கின. இப்படியே படிப்படியாக ஒருசில தமிழ் நிகழ்ச்சிகள் அதிகரிக்கத் தொடங்கின.

## தனியார் தொலைக்காட்சிகள்

நாளடைவில் தனியார் தொலைக்காட்சிச் சேவைகளும் இலங்கையில் அறிமுகமாகத் தொடங்கின. அவற்றிலும் பல்சுவை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இத்தகைய சூழ்நிலையானது, தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கிடையே தொழில் போட்டியாக மாறியதால், அதன் பயனை தொலைக்காட்சி ரசிகர்கள் அனுபவிக்கத் தொடங்கினர். ரசிகர்களை தம் பக்கம் ஈர்ப்பதற்காக விதவிதமான நிகழ்ச்சிகளை அவை ஒளிபரப்பின.

இதன் காரணமாக, தனியார் ஒளிபரப்புகளும் தமிழ் நிகழ்ச்சிகளைக் கலந்து ஒளிபரப்பத் தொடங்கின. இன்னும் சில வருடங்கள் கழிந்ததும் ரூபவாஹினி நிலையம் 'நேத்ரா' எனும் தமிழ் அலைவரிசையையும், மகாராஜா நிறுவனம் 'சக்தி' தொலைக்காட்சி சேவையையும் தமிழ் மொழியிலான இணை ஒளிபரப்புக்களை ஒளிபரப்பத் தொடங்கின. இத்தோடு வசந்தம் டீவி, வர்ணம் டீவி எனு மேலும் சில தமிழ் அலைவரிசைகள் உருவாகின.

## குறியீட்டு இசை

வானொலிகளுக்கு குறியீட்டு இசை இருப்பது போலவே தொலைக்காட்சி சேவைகளும் தத்தமக்கென தனித்துவமான குறியீட்டு இசைகளை காட்சித் தொகுப்புகளுடன் ஒளிபரப்பி வந்தன. இலங்கையில் தொலைக்காட்சி சேவைகள் ஆரம்பமாகியபோதிலும் அதனை ரசிக்கும் மக்களுக்கு இந்த தொலைக்காட்சி சேவை எவ்வாறு நடைபெறுகின்றது என்பதை நேரடியாக காண்பதற்கான வாய்ப்புக் கிட்டாதது பெரும் குறையாக இருந்தது. பாதுகாப்பு காரணங்களைக் காட்டியே, இந்த வாய்ப்பு வழங்கப்படவில்லை. நாட்டில் உள்ள மக்களுக்கு இன்றும்கூட இந்த வாய்ப்புக் கிடைப்பது மிகவும் அரிதாகவே உள்ளது.

ஊடக பாடநெறிகளை தொடர்கின்ற மாணவர்களாயினும் இந்த வாய்ப்புக்களை கேட்டுப் பெற்றுக்கொள்ள முயல வேண்டும். தொலைக்காட்சி, வானொலி ஆகியன அதிகப்படியான தொழிநுட்பத்தை சார்ந்திருப்பதனால் அவை இயக்கப்படும் விதங்களை மக்கள் நேரில் பார்க்க வேண்டிய ஒன்றாகவே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)

-ரிஷபன்

## ஏன்? எப்படி?

**கேள்வி:-** 'காற்றோட்டம்' எப்படி உருவாகின்றது?

**பதில்:-** சூரிய வெப்பத்தினால் எம்மைச் சூழவுள்ள காற்று வெப்பமாகி உறிஞ்சப்படுகின்றது. இதனால், அதன் அடர்த்தி குறைந்து மேலே எழும்பும் போது காற்றினுள் பாரிய வெற்றிடம் உருவாகின்றது அந்த வெற்றிடத்தை குளிர்காற்றானது, விரைந்து சென்று நிரப்புகின்றது. மீண்டும் சூரிய ஒளியினால் இந்த குளிர்காற்றும் வெப்பமாகி மேலே எழும்புகின்றது. இவ்வாறு தொடராக நிகழ்வதால் காற்றோட்டம் நடைபெறுகின்றது.



**கேள்வி:-** குளிர்பானம் அருந்தும் போது, குழாயினை (ஸ்ட்ரோ) வாயிலிருந்து எடுத்து முனையை விரலினால் மூடியவுடன் திரவ மட்டம் கீழ் நோக்கி செல்லாதது ஏன்?



**பதில்:-** பானத்தை உறிஞ்சும் போது, குழாயின் கீழ் முனையிலிருந்து குழாயினுள் குளிர்பானம் தள்ளப்பட்டு குழாயினூடாக மேல் நோக்கிச் செல்லும். இதன்போது, உறிஞ்சலை நிறுத்தி வாயை தளர்த்தியவுடன், அழுத்தம் பழைய நிலைமையை அடைகின்றது. இதனால் குழாயின் தாழ்வாக ஏற்படும் வளிமண்டல அழுத்தம் காரணமாக, திரவ மட்டம் கீழ் நோக்கிச் செல்கின்றது. ஆனால், வாய் தளர்த்தப்பட்டவுடன், அந்தக் குழாயின் திறந்த முனையினை விரலினால் அடைத்ததும் அதில் உள்ள அழுத்தம் மேலும் வெளிப்புற அழுத்தத்தினை விட அதிகரிக்காமையினால் திரவ மட்டம் கீழே செல்லாதிருக்கின்றது.

(-இ)

noolaham.org | aavanaham.org

# தடிமனா? கவனம் தேவை!

**சிலருக்கு மழையில் நனைந்தால் அல்லது குளிர்காலநிலைகளின்போது தும்மல் ஏற்படுவதுடன், மூக்கிலிருந்து நீர் வடிய ஆரம்பிக்கும். அவ்வாறே குளித்த பின்னும் சிலருக்கு தும்மல் ஏற்பட்டு மூக்கிலிருந்து நீர் வடியக்கூடும்.**

**Common Cold எனப்படும் இந்த தடிமன் இலகுவாகவும் வேகமாகவும் பீடிக்கும் ஒரு நோயாகும். ஆனால், இதனைப் பற்றி யாரும் பெரிதாக கவனத்தில் கொள்வதில்லை. எனினும், இந்த தடிமன் தீவிரமடைந்தால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றது. ஆகையால், தடிமன் பற்றிய மேலதிக விபரங்களை இங்கு பார்ப்போம்.**



## வைரஸ் தொற்றுக் காரணம்

தடிமன் வைரஸ் தொற்றுக் காரணமாக மிகவும் வேகமாகப் பரவுகின்றது. அனேகமாக, மழையில் நனைவது, அதிக குளிர் காலநிலையை அடிக்கடி எதிர்கொள்வது போன்ற காரணங்களால் இந்த வைரஸ் தொற்று ஏற்படுகின்றது. அதிகமாக 'ரைனோ' என்ற வைரஸ் பிரிவினாலேயே தடிமன் ஏற்படுகின்றது. அது மட்டுமன்றி மேலும் 200 வகையான வைரஸ்களினாலும் தடிமன் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளது.

## தடிமன் ஏற்பட்டால் ஏன் இருமல் வருகின்றது?

தடிமன் ஏற்பட்டால் வரும் நோய் அறிகுறிகளாக மூக்கிலிருந்து நீர் வடிதல், தும்மல் ஏற்படல், மூக்கு, கண்கள் சிவத்தல், மூக்கடைப்பு ஏற்படல், தொண்டை வலி என்பவற்றைக் குறிப்பிடலாம். மேலும் தடிமன் தொற்றியவர்களில் அரைவாசிப்பேருக்கு இருமலும் அறிகுறியாக ஏற்படுகின்றது. இந்த இருமலானது, வைரஸ் நோய்க் கிருமிக்கு எதிராக எமது உடல் காட்டும் ஆற்றலாகும்.



புரொன்கைட்டிஸுடன் கூடிய தடிமனுக்கு வைத்திய ஆலோசனை இன்றி பாணி மருந்துகளை எடுக்க வேண்டாம்

## தடிமன் இருக்கும் காலப்பகுதி

தடிமன் பொதுவாக 7 - 10 நாட்களுக்குள் குணமடைகின்றது. ஆனால், இருமல் அறிகுறி 2-3 வாரங்கள் வரை நீடிக்கக்கூடும்.

## இருமலுடன் வரும் சளி மஞ்சள் நிறமாயின்...?

சுவாசத் தொகுதியில் ஏற்பட்டுள்ள தொற்றினையே மஞ்சள் நிறமான சளி எடுத்துக்காட்டுகின்றது. இதனை 'புரொன்கைட்டிஸ்' என்றும் குறிப்பிடுவர்.



## புரொன்கைட்டிஸ் என்றால் என்ன?

தடிமன் மற்றும் இருமல் ஏற்பட்டவுடன் 'புரொன்கைட்டிஸ்' உருவாகும். இந்த தொற்றின்போது சுவாசப்பையினுள் உள்ள சுவாசக் குழாய்களில் உள்ள நாளங்களில் அழற்சி ஏற்படுகின்றது. இதனால் சுவாச நாளங்கள் வீக்கமடைந்து அவை மெல்லியதாகி விடுகின்றன. இதனால் சுவாசிப்பது கடினமாகிவிடுகின்றது. இதனை சுவாசக் குழாய் அழற்சி என்றும் கூறலாம்.

## சுவாசக் குழாய் அழற்சி எனப்படும் புரொன்கைட்டிஸின் அறிகுறிகள்

இதன் அறிகுறியாக வறண்ட இருமல் ஏற்படும். மஞ்சள் நிறமான சளி வெளியாகும். சுவாச வேகம் அதிகமாக இருக்கும். மேலும், இழுப்பு, காய்ச்சல் சுவாசிப்பதில் கடினம், உணவின்மீது வெறுப்பு, இருமலுடன் வாந்தி என்பனவும் ஏற்படும்.

**தடிமனுடன் கூடிய இருமல் நோய்க்கான மருந்துகளை உள்ளெடுக்க வேண்டும். இல்லையெனில், 'புரொன்கைட்டிஸ்' ஏற்பட்டால் கண்டிப்பாக மருத்துவரின் ஆலோசனையைப் பெற வேண்டும்.**

## இருமலுக்கு பாணி மருந்துகளைக் குடிக்கலாமா?

புரொன்கைட்டிஸ் நோயின்போது, ஏற்படும் இருமலுக்கு தன் இஷ்டப்படி பாணி மருந்துகளை உட்கொள்வது நல்லதல்ல. இதன்போது உணவு வெறுப்புத் தன்மை ஏற்படும். எனினும், உணவு உட்கொள்ள வேண்டும், நீர் அதிகம் அருந்த வேண்டும். அத்துடன், மருத்துவ ஆலோசனையும் அத்தியாவசியமானது.

## கவனம் தேவை

இருமலுடன் நெஞ்சு வலி ஏற்படுதல், இருமலுடன் இரத்தம் வெளியேறல், சுவாச வேகம் அதிகமாதல், சுவாசிக்கும்போது நெஞ்செலும்புகள் வெளி வருதல், சுவாசிக்கும் போது இரைச்சல் ஏற்படல், உதடுகளும், நாக்கும் நீல நிறமாதல் போன்ற நோய் அறிகுறிகள் காணப்படின் துரிதமாக மருத்துவரை அணுகுவது அவசியமாகும்.



## இது உயிர்க்கொல்லி நோயா?

கவனிக்காமல் இருந்தால் உயிர்க்கொல்லி நோயாக மாறக்கூடும். நியூமோனியா நிலைமை ஏற்பட்டால் மரணம் சம்பவிக்கக்கூடும். இதனால், தடிமனுடன் இருமல் ஏற்பட்டால் அதற்கான சரியான சிகிச்சைகளைப் பெற வேண்டும். புரொன்கைட்டிஸ் நிலைமை ஏற்பட்டால் மருத்துவ சிகிச்சைகள் பெறவேண்டியது மிகவும் அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறுக்கெழுத்துப் போட்டி எவ்வாறு உருவானது?


இன்று குறுக்கெழுத்துப் போட்டிகள் இல்லாத பத்திரிகைகளையோ, சஞ்சிகைகளையோ காண முடிவதில்லை. இந்த குறுக்கெழுத்துப் போட்டிகள் படித்தவர்களையும் பாமரர்களையும் மிகவும் ஈர்த்துள்ளது. அது மட்டுமன்றி, காலஞ்சென்ற இந்திய பிரதமர் இந்திராகாந்தி உள்ளிட்ட உலகின் பல பிரபலங்களின் முக்கிய பொழுதுபோக்காகவும் இந்த குறுக்கெழுத்துப் போட்டி இருந்துள்ளது.

இந்தக் குறுக்கெழுத்துப் போட்டியை 'ஆர்தர் வைனி' என்பவர், 'நியூயோர்க் வேர்ல்ட்' (Newyork World) எனும் நாளேடுக்கு முதன்முதலாக அனுப்பி வைத்தார். அப்பத்திரிகை அதை 1913 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி வெளியிட்டது. இதுவே, உலகில் முதன்முதலாக பத்திரிகை ஒன்றில் வெளிவந்த குறுக்கெழுத்துப் போட்டியாகும். ஆர்தர் வைனின் தாத்தா, வைனின் சிறு வயதில் வயல் வெளிகளில் ஆடிக் காட்டிய விளையாட்டை வைத்து இந்தக் குறுக்கெழுத்துக் கட்டங்களை வைனி அமைத்தார்.




இதனைச் சீரமைத்து பத்திரிகையில் வெளியிட்டபோது, அமெரிக்கர்கள் குறுக்கெழுத்துப் போட்டியில் அதிக ஆர்வம் கொண்டனர். இதனை தொடர்ந்து, 1922 ஆம் ஆண்டு சஞ்சிகையொன்றில் குறுக்கெழுத்துப் போட்டி வெளிவந்ததோடு, இப்போட்டிகளுக்கென தனியாக அகராதிகளும் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதனையடுத்து, லண்டனில் 1930 ஆம் ஆண்டு, முதன்முதலாக 'டைம்ஸ் ஒஃப் லண்டன்' என்னும் ஆங்கிலப் பத்திரிகையிலும் குறுக்கெழுத்துப் போட்டி வெளியிடப்பட்டது. இதுவே ஐரோப்பாவில் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த முதலாவது குறுக்கெழுத்துப் போட்டி ஆகும். இவ்வாறே, உலகம் முழுவதும் வெளிவரும் பத்திரிகை, சஞ்சிகைகளில் அந்தந்த மொழிகளில் குறுக்கெழுத்துப் போட்டிகள் வெளிவரத் தொடங்கின. (-அ)






**FUN'S Word-Cross Puzzle.**



FILL in the small squares with words which agree with the following definitions:

2-3. What bargain hunters enjoy.
4-5. A written acknowledgement.
6-7. Such and nothing more.
10-11. A bird.
14-15. Opposed to less.
18-19. What this puzzle is.
22-23. An animal of prey.
26-27. The close of a day.
28-29. To elude.
30-31. The plural of is.
8-9. To cultivate.
12-13. A bar of wood or iron.
16-17. What artists learn to do.
20-21. Fastened.
24-25. Found on the seashore.
10-18. The fibre of the gomuti palm.
6-22. What we all should be.
4-26. A day dream.
2-11. A talon.
19-28. A pigeon.
F-7. Part of your head.
23-30. A river in Russia.
1-32. To govern.
33-34. An aromatic plant.
N-8. A fist.
24-31. To agree with.
3-12. Part of a ship.
20-29. One.
5-27. Exchanging.
9-25. Sunk in mud.
13-21. A boy.


## வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

★ Practical English Learning Software DVD



★ 4000 English Letter Writing Software



★ 8 GB Pen Drive



புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன்கிழமையிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்கத் தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

★ 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாராந்தம்...

★ ஆங்கிலம் கற்கும் மென்பொருள் DVD

★ 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்

★ 8GB பென் டிரைவ்

போன்றன இலவசமாக வழங்கப்படும்.

*29.06.2016 'தூவானம்' கேள்விக்கான விடை:*
சுவிட்ஸர்லாந்து
**Pendrive** வெற்றியாளர்:
ஏ.கே.எம்.யூனூஸ்,
191, உக்கார் வீதி,
மலையடிக்கிராமம்-01, சம்மாந்துறை.

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை

Write Message
**F Thoovaanam என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்**

அனுப்ப வேண்டிய முகவரி:
Pen Drive போட்டி
(13.07.2016)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

**இவ்வார கூப்பன்:**
13.07.2016
விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தெ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................
....................
கையொப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ப்பல்வகைமை

## BIODIVERSITY

உலகின் இருப்பிற்கு இன்றியமையாத அங்கமாக 'உயிர்ப்பல்வகைமை' (Biodiversity) காணப்படுகின்றது. உலகில் வாழும் மில்லியன் கணக்கான விலங்குகள் மற்றும் தாவரங்கள் இந்த உயிர்ப்பல்வகைமையில் அடங்கும். இது பற்றி உலக மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் முகமாக ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையில் 1992ஆம் ஆண்டு உயிர்ப்பல்வகைமை பற்றிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

### உயிர்ப்பல்வகைமை என்பது...

உயிர்ப்பல்வகைமை என்பது, பூமியில் வசிக்கும் பலதரப்பட்ட உயிரினங்களைக் குறிக்கும் சொல்லாகும். இது மூன்று வகைப்படும்.

**01** மரபியற் பல்வகைமை
குறிப்பிட்டதோர் இனத்தைச் சார்ந்ததாக பலதரப்பட்ட உயிரினங்கள் இருக்கும் நிலையினையே இது குறிக்கின்றது.

**02** இனப் பல்வகைமை
ஒரு பிரதேசத்தில் வாழும் பலதரப்பட்ட இனங்கள் இதில் அடங்கும்.

**03** சூழல் தொகுதி பல்வகைமை
குறிப்பிட்டதோர் இடத்தில் உள்ள சூழல் தொகுதிகளில் காணப்படும் வேறுபாடுகளை இது குறிக்கின்றது.

**COP 10**

2010 ஒக்டோபர் ஜப்பானின் அய்ச்சியில்



COP10 AICHI-NAGOYA

ஜப்பானின் அய்ச்சி பிராந்தியத்தின் நகோயா நகரில் நடைபெற்ற COP 10 மாநாட்டில் 2011- 2020 வரையான காலப்பகுதி ஐக்கிய நாடுகள் சபையினால் 'உயிர்பல்வகைமை தசாப்தம்' ஆக பிரகடனப்படுத்தப்பட்டது. இதனையடுத்து, அதற்குரிய திட்ட நடவடிக்கைகளின் பிரகாரம் 20 அய்ச்சி இலக்குகள் முன்வைக்கப்பட்டன. A, B, C, D மற்றும் E ஆகிய ஐந்து உபாயத் திட்டங்களின்கீழ் இந்த இலக்குகள் வகுக்கப்பட்டுள்ளன.




## 2020 இ...
## எட்டப்பட...
## அய்ச்சி...
## இலக்கு...

AICHI BIODIVERSIT...

பற்றி உங்களுக்குத் தெரியும...



**1** உயிர்ப் பல்வகைமையின் முக்கியத்துவம் பற்றி மக்களுக்கு அறிவுறுத்தல் மற்றும் அதனைப் பாதுகாத்தல்




**2** தேசிய மற்றும் பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் உயிர்ப்பல்வகைமை பற்றிய விடயங்களை சேர்த்தல்




**3** உயிர்ப்பல்வகைமைக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் விடயங்களை சுற்றாடலிலிருந்து அகற்றல் மற்றும் அவற்றைக் குறைத்தல்



**4** நிலையான உற்பத்திக்காக அரசு மற்றும் இதர பங்காளர்கள் முன்னணி வகித்தல்



**5** வனாந்தரம் உள்ளிட்ட, அனைத்து இயற்கை வாசஸ்தலங்களையும் இழக்கும் விகிதத்தினைக் குறைத்தல்



**6** அனைத்து மீனினங்கள் மற்றும் நீர்த்தாவரங்களை சரியான முறையில் முகாமைத்துவப்படுத்தி வளர்த்தல்



**7** விவசாயம் மற்றும் நீர் வேளாண்மையில் திடத்தன்மையினைப் பேண நடவடிக்கை எடுத்தல்



**8** அனைத்துவிதமான மாசுகளாலும் சுற்றாடலுக்கும் உயிர்ப்பல்வகைமைக்கும் ஏற்படும் பாதிப்பினைக் குறைத்தல்



**9** ஆக்கிரமிப்புத் தாவரங்களை இனங்கண்டு முக்கியத்துவத்தின் அடிப்படையில் கட்டுப்படுத்தல்



**10** காலநிலை மாற்றங்கள் காரணமாக, பாதிப்படையும் பவளப்பாறைகள் உட்பட, சுற்றாடல் தொகுதிகள் மீது கவனம் செலுத்துதல்



**20** இந்த உயிர்ப்பல்வகைமை தசாப்தத்தினை வெற்றிகர மாக்குவதற்குத் தேவையான நிதி வளங்களை வழங்குதல்



உயிர்ப்பல்வ...
அதனுடன் தெ...
தொழில்நுட்ப...
செலுத்தல்

உ...
நன்...
அவ...

இந்த COP 10 மாநாட்டில் 107 ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. 47 தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அவற்றில் சிலவற்றை இங்கு நோக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்
டவுள்ள
ச்சி
க்குகள்
ERSITY TARGETS
தெரியுமா



யிர்ப்பல்வகைமை மற்றும்
தனுடன் தொடர்புடைய
தொழில்நுட்பம் பற்றி கவனம்
லுத்தல்



உயிர்ப்பல்வகைமை
யினைப் பாதுகாப்பதற்குத்
தேவையான அறிவினை
சேகரித்தல்



அனைத்து
நாடுகளும் தமது
உயிர்ப்பல்வகைமை
யினைக்
பாதுகாப்பதற்கு
உபாயங்களையும்
திட்டங்களையும்
முன்னெடுத்தல்



நகோயா
நெறிமுறையின்படி
(Nagoya Protocol)
மரபணு வளங்களின்
நலன்கள்
அனைவருக்கும்
சமமாக
கிடைப்பதற்கு வழி
செய்தல்



பாலைவனமாக்கலுக்கு
எதிராகப் போராடி
வளிமண்டலத்தில் காபன்
அளவினைக் குறைத்தல்



அத்தியாவசிய சேவைகளை
வழங்கும் சுற்றாடல் தொகு
திகளை மீளமைக்கவும்
பாதுகாக்கவும் நடவடிக்கை
எடுத்தல்



வேளாண்மைக்காக பயன்படுத்தும்
மரபணு மாற்றப்பட்ட தாவரங்கள்
மற்றும் விலங்குகளின் மரபியற்
பல்வகைமையைப் பாதுகாத்தல்



உயிர்ப்பல்வகைமைக்
காக பெறுமதி மிக்க
நன்னீர் மற்றும் உவர்நீர்
நீர்நிலைகளை
இனங்கண்டு
அவற்றைப் பாதுகாத்தல்





அழியும் அபாயத்
தில் உள்ள
விலங்குகள்
மற்றும் தாவரங்
களை இனங்கண்டு
அவற்றை
பாதுகாத்தல்




**2011-2020**

**United Nations Decade on Biodiversity**

## ஐக்கிய நாடுகளின் உயிர்ப்பல்வகைமை தசாப்தம்

2010 ஆம் ஆண்டு ஜப்பானின் அய்ச்சி பிராந்தியத்தில் நடைபெற்ற COP 10 ஆவது மாநாட்டில் முன்வைக்கப்பட்ட உத்தேச யோசனைகளின் அடிப்படையில், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையினால் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதி ஐக்கிய நாடுகள் சபையின் உயிர்ப்பல்வகைமை தசாப்தமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இங்கு பிரதானமாக உயிர்ப்பல்வகைமையினைப் பாதுகாப்பதற்கான திட்ட வரைபுகளைத் தயாரித்தல், இலக்குகளை அடைவதற்கான ஒத்துழைப்பு மற்றும் அறிவினை வழங்குதல், உயிர்ப்பல்வகைமையினைப் பாதுகாப்பது பற்றி மக்களை அறிவுறுத்தல் மற்றும் கவனத்தினை ஈர்த்தல் என்பன பற்றி கவனம் செலுத்தப்படுகின்றது. ஜப்பானின் கனசாவா நகரில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.



## நகோயா நெறிமுறை

மரபியற் பல்வகைமைமூலம் கிடைக்கும் வளங்களை சாதாரணமான முறையிலும் சமமாகவும் உலகம் முழுவதும் விஸ்தரிப்பதனை நோக்காகக் கொண்டு, 2014 ஆம் ஆண்டு முதல் உயிர்ப்பல்வகைமை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டது.

## COP 10 தீர்மானங்கள் சில...

* மரபணு வளங்களின் நலன்கள் அனைவருக்கும் சமமாகப் பகிரப்படல் வேண்டும்.
* உயிர்ப்பல்வகைமை தசாப்தம் மற்றும் அய்ச்சி இலக்குகளை அமுல்படுத்த நடவடிக்கை எடுத்தல்.
* உயிர்ப்பல்வகைமை உடன்படிக்கை மற்றும் உத்திகளை அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
* வறுமையை ஒழித்தல் மற்றும் அபிவிருத்திக்காக உயிர்ப்பல்வகைமையினை ஒன்றிணைத்துக்கொள்ளல்.
* தொடர்பாடல், கல்வி மற்றும் மக்கள் விழிப்புணர்வு ஆகியவற்றின் மூலம் உயிர்ப்பல்வகைமை தினத்தை அனுஷ்டித்தல்.
* ஏனைய உடன்படிக்கைகள், சர்வதேச அமைப்புகள் மற்றும் தலைமைதாங்கும் நபர்களுடன் தொடர்புகளைப் பேணுதல்.
* உயிர்ப்பல்வகைமை தொடர்பில் உப தேசிய அரசுகள், நகர சபை மற்றும் பிராந்திய அதிகாரிகளை நியமித்தல்.
* ஆற்றுநீரின் உயிர்ப்பல்வகைமை, சமுத்திர மற்றும் கரையோர உயிர்ப்பல்வகைமை, பாதுகாப்பு பகுதிகள், சிறப்பான பயன்பாடு, உயிர் எரிவாயு மற்றும் உயிர்ப்பல்வகைமை ஆகிய தலைப்புகள் பற்றி ஆராய்ந்து கலந்துரையாடுதல்
* உயிர்ப்பல்வகைமை உடன்படிக்கையினை அமுல்படுத்தும்போது, உள்நாட்டு மக்களிடமிருந்து கிடைக்கும் ஆலோசனைகளை முன்னிலைப்படுத்துவதற்கான பொறிமுறையினை உருவாக்குதல்.

(-பிரியா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்டோன்ஹென்ஜ் உருவாக்கியவர்கள் யாவர்?

பிரித்தானியாவின் செலிஸ்பரி சமவெளியில் காணப்படுகின்ற பாரிய கற்தூண்கள் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன. இந்த கற்தூண்கள் Stonehenge என்று அழைக்கப்படுகின்றன. இவை எப்பொழுது அமைக்கப்பட்டன?, யாரால் நிர்மாணிக்கப்பட்டன?, எதற்காக இவை நிர்மாணிக்கப்பட்டன? போன்ற கேள்விகளுக்கு விஞ்ஞானிகளால் இதுவரை விடை காண முடியவில்லை. எனவே, ஸ்டோன்ஹென்ஜ் என்பது, துலக்க முடியாத மர்மமாகவே காணப்படுகின்றது. இந்த கற்தூண்களை உலகின் மிகவும் பழமையான நாட்காட்டி என்றே சில விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

## கற்தூண்கள் நகர்த்தப்படல்


ஸ்டோன்ஹென்ஜ் கற்தூண்களைப் போன்ற ஓர் அமைப்பினை உருவாக்க லண்டன் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் பேராசிரியர்களும் மாணவர்கள் சிலரும் ஆய்வு ரீதியில் சில முயற்சிகளை மேற்கொண்டனர். இந்த செயற்பாட்டினை பல்கலைக்கழக ஆய்வாளரான பாகி ஹெரிசன் முன்னெடுத்திருந்தார். அதற்கமைய, பண்டைய காலத்தினைப் போன்று மரபு ரீதியிலான உபகரணங்களைப் பயன்படுத்தி கற்தூண்கள் நகர்த்தப்பட்டன. லண்டன் நகர கோடன் சதுக்கத்திலேயே இந்த கற்தூண்களை நகர்த்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு ரீதியான செயற்பாட்டில் சுமார் 40 முதல் 50 பேர் வரை கலந்துகொண்டனர். இதன்போது மரக்குற்றிகள்மீது ஏற்றப்பட்டே கற்தூண்கள் நகர்த்தப்பட்டன. இந்த செயற்பாடு அவர்களுக்கு இலகுவான காரியமாக இருக்கவில்லை.

## ஸ்டோன்ஹென்ஜ் ஆய்வுகள்

பல நூற்றாண்டுகளாக ஸ்டோன்ஹென்ஜ் குறித்து பல ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றின்மூலம் ஸ்டோன்ஹென்ஜ் கற்தூண்கள் நிர்மாணிக்கப்பட்ட காலப்பகுதி குறித்த தகவல்களைப் பெற முடிந்தாலும், ஸ்டோன்ஹென்ஜ் என்றால் என்ன என்பது குறித்து கண்டறிய முடியவில்லை. இவை முன்னாள் பிரித்தானிய அரசர்களின் கல்லறைகளாக இருக்கலாம் என சிலர் கருதினர். மேலும் சிலர், பேகன் கடவுளை வணங்குவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இடமாக இருக்கலாம் என்று குறிப்பிட்டனர். இன்றும் சிலர், இந்த கற்தூண்கள் பிரபல ஆத்தர் மன்னரின் மந்திரவாதியான மர்லினால் உருவாக்கப்பட்டதாகும் என்று கருதினர். எவ்வாறாயினும், மிகவும் அண்மைக்காலத்தில் ஸ்டோன்ஹென்ஜ் பற்றி முக்கியமான கருத்தொன்று முன்வைக்கப்பட்டிருந்தது. அதாவது, இவை சிறந்த தொழில்நுட்ப வல்லமை கொண்ட வேற்றுக்கிரகவாசிகளின் படைப்பு என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. எனினும், இந்த கற்தூண்கள் புராதன கால வானியல் அறிஞர்களினால் பயன்படுத்தப்பட்ட மிகவும் சிக்கலான நாட்காட்டி என்று தற்கால விஞ்ஞானிகள் சிலர் குறிப்பிடுகின்றனர்.

## ஸ்டோன்ஹென்ஜ் நிர்மாணிப்பு

பாறைகள் பற்றி ஆராய்ச்சி செய்வோரின் கருத்தின்படி, ஸ்டோன்ஹென்ஜ் மிகவும் பழமையானதொரு படைப்பாகும். இது மூன்று சந்தர்ப்பங்களில் மூன்று பகுதிகளாக




நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதன் முதல் பகுதி கி.மு. 3100ஆம் நூற்றாண்டுக்குரியது. பிரித்தானியாவின் செலிஸ்பரியில் இருந்து 15 கி.மீற்றர் தொலைவில் அமைந்துள்ள இந்த ஸ்டோன்ஹென்ஜின் சிறப்பம்சமாக, பாரிய கற்தூண்கள் வட்ட வடிவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளமையைக் குறிப்பிடலாம். இவை நவீன கற்காலத்திற்குரியவை (கி.மு.4500 முதல் 1500 வரையான காலப்பகுதி) என்று கருதப்படுகின்றது.

## மேலதிக கவனம்


இதுவரை ஸ்டோன்ஹென்ஜ்ஜை மையப்படுத்தியே நவீன கற்காலம் தொடர்பில் அலசி ஆராயப்பட்டு வந்தபோதும், எதிர்காலத்தில் இங்கு உள்ள மர்மங்கள் குறித்து தீவிரமாக கவனம் செலுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(-பீ)










noolaham.org | aavanaham.org

# சுற்றாடலைப் பாதுகாக்கும் இயற்கை விவசாயம்



இயற்கை விவசாயம் அல்லது கரிம விவசாயம் என்பது (Organic Farming) தற்போது உலகம் முழுவதும் பிரபல்யமாகி வருகின்றது. பாரம்பரிய வேளாண்மை முறைகளும் இதில் அடங்குகின்றன. மனித உடலுக்கு எந்தவிதமான பாதிப்பினையும் ஏற்படுத்தாத - இயற்கை சுற்றாடலுக்கு ஏற்புடைய விவசாய முறையாக இது கருதப்படுகின்றது.

இயற்கை விவசாயத்தின்போது, சுற்றாடல் மாசடைவுக்கு காரணமாகின்ற - மனித ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிக்கின்ற களைக்கொல்லிகள், பசளைகள், எரிபொருட்கள் என்பன பயன்படுத்தப்பட மாட்டா. மாறாக, பண்ணைகளில் இருந்து பெறப்படும் சுற்றாடலுக்கு ஏற்புடைய மாற்றுப் பதார்த்தங்களான விலங்குகள் மற்றும் தாவரங்களின் கழிவுகளிலிருந்து தயாரிக்கப்படுகின்ற கொம்போஸ்ட் உரம், தாவரப் பகுதிகளிலிருந்து தயாரிக்கப்படுகின்ற பசுந்தாள் உரம் மற்றும் மேலும் சில இயற்கை உரங்கள் என்பனவே இதன்போது பயன்படுத்தப்படுகின்றன.

## இயற்கை விவசாயத்தின் முக்கிய கோட்பாடுகள்

மண்ணின் வளம் மற்றும் மண்ணில் வாழும் நுண்ணங்கிகளின் செயற்பாடுகளை இயற்கையாக பாதுகாத்து பயிர்செய்கை முன்னெடுக்கப்படுவதே இயற்கை விவசாயத்தின் சிறப்புத் தன்மை ஆகும். இதன்போது, இயற்கை எதிரிகளும் இயற்கையான முறையிலேயே தடுக்கப்படுகின்றன. இயற்கை சுற்றாடலில் உள்ள போஷாக்குப் பதார்த்தங்கள் விளைச்சலுக்கு கிடைக்க வழி செய்யப்படுகின்றன. சுற்றாடலுக்கு நன்மை விளைவிக்கும் தேனீக்கள் மற்றும் இதர பூச்சியினங்களை பாதுகாப்பதன் ஊடாக பயிர்களைத் தாக்கும் நோய்களை இயற்கையாகவே தடுத்துக்கொள்ள முடியும்.



சர்வதேச மட்டத்திலான இயற்கை விவசாய இயக்கம் (IFOAM), இயற்கை விவசாயத்தை பின்வரும் கோட்பாடுகளின் அடிப்படையில் வகுத்து விளக்குகின்றது.

★ **ஆரோக்கியம் பற்றிய கோட்பாடு:**

நிலம், தாவரங்கள், விலங்குகள், மனிதர்கள் ஆகியவற்றின் ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு அவற்றை நீடித்து நிலைக்கச் செய்யும் வகையிலும் மேம்படுத்தும் வகையிலும் செயல்படல்.

★ **சுற்றாடல் பற்றிய கோட்பாடு:**

இயற்கை விவசாயமானது, உயிர்ச்சூழல் தொகுதி மற்றும் இயற்கை சுழற்சியினை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். இவற்றுடன் இணைந்து செயல்படுவதனூடாகவும் மேம்படுத்துவதனூடாகவும் அவற்றின் இருப்பு உறுதி செய்யப்படுகின்றது.

★ **நடுநிலையாக செயல்படுதல் பற்றிய கோட்பாடு**

அனைவருக்கும் கிடைக்கச் செய்து, வாழ்வதற்கு சம சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொடுத்தலும் வசதியான சுற்றாடலை உருவாக்குவதற்குத் தேவையான தொடர்புகளை கட்டியெழுப்புதலும்.

★ **பராமரிப்பு பற்றிய கோட்பாடு**

நிகழ்கால மற்றும் எதிர்கால சந்ததியினதும் சுற்றாடல் தொகுதியினதும் ஆரோக்கியம் மற்றும் இருப்புக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இயற்கை விவசாயத்தை முன்னெடுத்தல்.

## இயற்கை விவசாயத்தின்போது...

இயற்கை விவசாய நடவடிக்கையின்போது, செயற்கைப் பசளை, தடைசெய்யப்பட்ட களைக்கொல்லிகள், செயற்கை ஹோமோன்கள் மற்றும் மருந்துகள் என்பனவற்றின் பயன்பாடு தவிர்க்கப்பட வேண்டும். இயற்கை விவசாய நிலமானது, இயற்கை விவசாய முறை பின்பற்றப்படாத நிலத்திலிருந்து வேறுபட்டதாக அமைந்திருத்தல் வேண்டும். இயற்கை விவசாய முறையில் பயிரிடப்பட்ட பயிருக்கும் செயற்கை விவசாய முறையில் பயிரிடப்பட்ட பயிருக்கும் இடையில் குறைந்தது 1 மீற்றர் இடைவெளி இருக்க வேண்டும். இயற்கை விவசாய முறை பின்பற்றப்படாத பயிர்களுக்குத் தெளிக்கப்படும் பூச்சிக்கொல்லி மருந்துகள், இயற்கை விவசாய பயிர்களுக்கு வராமல் தடுப்புகள் அமைக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන்
ஆயுபோவன்
**வணக்கம்**

**இன்றைய பாடத்தில் அண்ணாவுக்கும் தம்பிக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.**

මල්ලි: අයියේ! ඉක්මණට එන්න.
அய்யே! இக்மணட்ட என்ன.
தம்பி: **அண்ணா! கெதியாக வாருங்கள்.**

අයියා: ඇයි මල්ලි?
எய் மல்லி?
அண்ணா: **ஏன் தம்பி?**

මල්ලි: අයියේ, අර අඹ ගහේ ගිරා පැටියෙක් ඉන්නවා.
அய்யே, அர அம்ப கஹே கிரா பெட்டியெக் இன்னவா.
தம்பி: **அண்ணா, அந்த மா மரத்தில் கிளிக் குஞ்சொன்று இருக்கிறது.**

අයියා: කොහේද?
கொஹேத?
அண்ணா: **எங்கே?**

මල්ලි: අර අතන පහත අත්තේ.
அர அத்தன பஹத அத்தே.
தம்பி: **அதோ, அங்கே கீழே உள்ள கிளையில்.**

අයියා: ආ.. ඔව්මයි. අපි ගිහින් බලමු.
ஆ... ஒவ்மய். அப்பி கிஹின் பலமு.
அண்ணா: **ஆ... உண்மைதான். நாங்கள் போய்ப் பார்ப்போம்.**

මල්ලි: අයියේ, පොඩි පැටියෙක්.
அய்யே, பொடி பெட்டியெக்.
தம்பி: **அண்ணா, சிறிய குஞ்சொன்று.**

අයියා: ඔව් මල්ලි. අපි අරගෙන ඇති කරමුද?
ஒவ் மல்லி. அப்பி அரகென எத்தி கரமுத?
அண்ணா: **ஆம் தம்பி. நாங்கள் எடுத்து வளர்ப்போமா?**

මල්ලි: අයියේ, මඩුවේ පොඩි කූඩුවක් තියෙනවා නේද?
அய்யே, மடுவே பொடி கூடுவக் தியெனவா நேத?
தம்பி: **அண்ணா, மடுவத்தில் சிறிய கூடொன்று இருக்கிறது தானே?**

අයියා: ඔව්. අපි දැනට ඒකට දාමු. ටිකක් ලොකු වුණාම ඌව අරිමු.
**ஒவ். அப்பி தெனட்ட ஏகட்ட தாமு. டிக்கக் லொகு வுணாம ஊவ அரிமு.**
அண்ணா: **ஆம். நாம் இப்போதைக்கு அதில் போடுவோம். கொஞ்சம் பெரிதானதும் அதை விட்டுவிடுவோம்.**

මල්ලි: හා අයියේ.
මම ඌට කන්න
පලතුරු දෙන්නම්.
ஹா அய்யே.
மம ஊட்ட கன்ன
பலதுரு தென்னம்.
தம்பி: **நல்லது அண்ணா.
நான் அதற்கு
சாப்பிடப்
பழங்கள்
கொடுக்கிறேன்.**

**பயிற்சி**

**இடைவெளிகளை நிரப்புக.**

1. අඹ ගහේ ගිරා ..................
2. පොඩි .................. තියෙනවා.
3. කන්න ................ දෙන්නම්.




## தன் கூற்று வாக்கியம் - பிறர் கூற்று வாக்கியம்
## Direct speech & Indirect speech

**தன் கூற்று மற்றும் பிறர் கூற்று வாக்கியங்களின் 'எதிர்மறை' நிலையில் உள்ள வாக்கியங்கள் பற்றி மேலும் இங்கே பார்ப்போம்.**

அ) Mother said to her daughter, "Don't tell a lie".
தாய் தனது மகளிடம் கூறினார், "பொய் சொல்லாதே" என்று.
(தன் கூற்று வாக்கியம் -Direct speech)

ஆ) Mother told her daughter not to tell a lie.
தாய் தனது மகளைப் பொய் சொல்ல வேண்டாமெனக் கூறினார்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

★ **வினைச் சொற்றொடர்கள் பற்றிய குறிப்புகள்:**

★ "Don't tell a lie" - Direct speech (Negative)
"பொய் சொல்லாதே" - தன் கூற்று (எதிர்மறை)

★ not to tell a lie - Indirect speech (Negative)
பொய் சொல்ல வேண்டாமென - பிறர் கூற்று (எதிர்மறை)

இ) The teacher said to the students "Don't go out".
ஆசிரியர் மாணவர்களிடம் கூறினார், '
"வெளியே போகாதீர்கள்" என்று.
(தன் கூற்று வாக்கியம் -Direct speech)

ஈ) The teacher told the students not to go out.
ஆசிரியர் மாணவர்களை வெளியே போக வேண்டாமெனக் கூறினார்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

★ **வினைச் சொற்றொடர்கள் பற்றிய குறிப்புகள்:**

★ "Don't go out" - Direct speech (Negative)
"வெளியே போகாதீர்கள்" - தன் கூற்று (எதிர்மறை)

★ not to go out - Indirect speech (Negative)
வெளியே போக வேண்டாமென - பிறர் கூற்று (எதிர்மறை)

உ) Father said to his son, "Don't open the window".
தந்தை தனது மகனிடம் கூறினார், "ஜன்னலைத் திறக்காதே" என்று.
(தன் கூற்று வாக்கியம் -Direct speech)

ஊ) Father told his son not to open the window.
தந்தை தனது மகனை ஜன்னலைத் திறக்க வேண்டாமெனக் கூறினார்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

★ "Don't open the window" - Direct speech (Negative)
"ஜன்னலைத் திறக்காதே" - தன் கூற்று (எதிர்மறை)

★ Not to open the window - Indirect speech (Negative)
ஜன்னலைத் திறக்க வேண்டாமென - பிறர் கூற்று (எதிர்மறை)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைப் பதவியை விட்டு ஓடி ஒளிய முடியாது

## மெத்யூஸ் தெரிவிப்பு

இங்கிலாந்திற்கு எதிராக நடைபெற்ற டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டித் தொடர்களில் இலங்கை அணி தோல்வி அடைந் தமைக்காக, அணியின் தலைமைப் பதவியை துறந்து ஓடிவிடப் போவ தில்லை என்று இலங்கை அணியின் தலைவர் மெத்யூஸ் தெரிவித்துள்ளார்.

'எந்த ஒருவருக்கும் நல்ல காலம்' கெட்ட காலம் என்பது மாறி மாறி வருவ துண்டு. அந்த வகையில், அணியின் தலைவர் என்ற ரீதியில் எனக்கும் அணியின் ஏனைய வீரர்களுக்கும் கூடாத காலமாகும். இவ்வாறு நடந்தது என்பதற்காக எல்லாவற்றை யும் கைவிட்டுவிட்டு ஓடிவிட முடியாது என்று கூறியுள்ள மெத்யூஸ் தமது அணி சகல அம்சங்களிலும் முன்னேற வேண்டியிருப் பதை ஒப்புக்கொண்டுள்ளார். இருப்பினும் ஒருநாள் போட்டியில் இலங்கை அணி குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை கண்டி ருப்பதாகவும் குறிப்பிட் டுள்ள மெத்யூஸ் நமது அணியினால் மீள் எழுச்சி



பெற முடியும் என்று மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மெஸ்ஸிக்கு மீண்டும் வருமாறு அழைப்பு

## ரசிகர்கள் வீதியில் கோஷம்

லயனல் மெஸ்ஸி சர்வதேச கால்பந்தாட்டப் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்ததையடுத்து




மெஸ்ஸி தனது முடிவை மாற்றிக் கொண்டு மீண்டும் கால்பந்தாட்டப் போட்டியில் கலந்துகொள்ள வேண்டும் என்று ஆர்ஜன்டீன ரசிகர்கள் வீதியில் இறங்கி கோஷம் எழுப்பியுள்ளனர்.

"மெஸ்ஸி போன்ற ஒரு வீரர் 500 மில்லியன் வருடங்களுக்கு ஒருவரே உருவாகுவார் என்ற பிரபல வாக்கியமும் உள்ளது. அதனை நாம் நம்புகின்றோம். அத்தகையவர் நமது காலத்தில் பிறந்திருப்பது குறித்து கடவுளுக்கு நன்றி தெரிவிக்கின்றோம்" என்று ஆர்ஜன்டீனா கால்பந்து ரசிகர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆர்ஜன்டீன அணியின் அடுத்த போட்டி எதிர்வரும் செப்டெம்பரில் உருகுவே அணியுடன் இடம்பெறவுள் ளது. 2018 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டி களில் இடம்பெறுவதற்கான தகுதிகாண் போட்டியாக இது அமையவுள் ளது. எனவே, இந்த போட்டி களுக்கு முன்னர் மெஸ்ஸி மீண்டும் போட்டியில் கலந்து கொள்ள முன்வர வேண்டும் என்று ரசிகர்கள் குறிப்பிட்டுள் ளனர்.




# 'மினி ஐ பி எல்' போட்டிகள் விரைவில்

MINI IPL

ஐ பி எல் போட்டிகளை ஒத்த வடிவிலான 'மினி ஐ பி எல்' (Mini IPL) போட்டித் தொடரொன்றை நடத்துவதற்கு இந்திய கிரிக்கெட் சபை சிந்தித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஐ பி எல் போட்டிகளை ஒத்ததாக இப்போட்டிகள் அமையவுள்ளபோதிலும் குறைந்த எண்ணிக்கையிலான போட்டிகளை கொண்டதாக இப்போட்டிகள் அமையும் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

அநேகமாக, இப்போட்டிகள் இந்தியாவில் நடத்தப்படாமல் வெளிநாடொன்றில் நடத்தப்படலாம் என்றே தெரிவிக்கப்படு கின்றது. இரண்டு வாரங்களுக்கு மாத்திரமே நடைபெறுகின்ற இப்போட்டித் தொடருக்கு 'மினி ஐ பி எல்' என்று பெயரிடப் பட்டுள்ளது. இப்போட்டி எதிர்வரும் செப்டெம்பர் மாதமளவில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், இந்த 'மினி ஐ பி எல்' போட்டித் தொடரில் எல்லா ஐ பி எல் அணிகளும் பங்குபற்றுமா? அல்லது கடந்த ஐ பி எல் தொடரில் இறுதியாக தெரிவாகிய நான்கு அணிகள் மட்டும் கலந்து கொள்ளுமா? என்பது குறித்து இன்னமும் குறிப்பிடப்படவில்லை.

# ஒலிம்பிக் வாய்ப்பை பெற்றுள்ள மெத்யூ....



இலங்கையைச் சேர்ந்த நீச்சல் போட்டி வீரர் மெத்யூ அபேசிங்ஹ இம்முறை நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டி யில் இலங்கையின் சார்பாக போட்டியிடுவதற்கான தகுதியைப் பெற்றுள்ளார். ஹொங்கொங் பகிரங்க நீச்சல் போட்டி ஆடவர் பிரிவில் 100 மீற்றர் நீச்சல் தூரத்தை 50.53 செக்கன்களில் நீந்தி முடித்ததன் காரணமாகவே, இந்த வாய்ப்பை அவர் பெற் றுள்ளார். இதன்படி தகுதிகாண் போட்டியொன்றின்மூலம் ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்வதற்கான வாய்ப்பைப் பெற்ற முதல் இலங்கையர் என்ற பெருமையை மெத்யூ பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்னர் இலங்கை சார்பாக ஒலிம்பிக் நீச்சல் போட்டிகளில் கலந்துகொண்டவர்கள் தகுதிகாண் போட்டிகளின்மூலம் அல்லாமல் 'வைல்ட் கார்ட்' முறையிலேயே தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

noolaham.org | aavanaham.org

# மண் புழுக்கள் உருவாக்கிய வியப்பூட்டும் நிலப்பொந்துகள்

*லத்தின் அமெரிக்காவைச் சேர்ந்த கொலம்பியா, வெனிசியுலா ஆகிய நாடுகளுக்கிடையிலான எல்லைப் பகுதியில் ஆயிரக்கணக்கான சதுப்பு நிலப்பொந்துகளைக் காண முடியும். இவை ஒன்றுக்கொன்று சமமான அளவில் அருகருகே அமைந்துள்ளதுடன், சிலவற்றின் அளவுகள் ஒரே அளவானதாகவும் உள்ளது. இந்த நிலப் பகுதியானது, மிக நீண்ட காலமாகவே, விஞ்ஞானிகளை வியப்பில் ஆழ்த்தி வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.*




## நிலப்பொந்துகள் கொண்ட பகுதி

புற்கள் நிறைந்த இந்த சதுப்புநிலப் பகுதியில் வாழும் மக்கள் இங்கு நிகழும் மர்ம நிகழ்வுகள் குறித்து அச்சம் கலந்த



உணர்வினைக் கொண்டிருக்கின்றனர். இங்கு ஏதோ அமானுஷ்யம் இருப்பதாக அவர்கள் கருதுகின்றனர். நிலத்தில் உள்ள இந்த நிலப்பொந்துகளின் அகலம் 5 மீற்றர் வரை பெரியதாகும். இதன் சுற்றளவு 2 மீற்றர் வரை காணப்படுகின்றது. இந்த நிலப்பொந்துகள் அமைந்துள்ள பகுதியான 'லானோஸ்' என்ற சதுப்பு நிலம் ஒரினோக்கோ ஆறு காரணமாக உருவாகியுள்ளது.

## ராட்சத மண்புழுக்கள்

இந்த நிலப்பொந்துகள் உருவாவதற்கு இங்கு வாழும் மண் புழுக்களே, காரணம் என்று விஞ்ஞானிகள் தற்போது உறுதிப்படுத்தியுள்ளனர்.

## 1940இல் கண்டுபிடிப்பு

இந்த நிலப்பொந்துகள் முதலில் 1940ஆம் ஆண்டிலேயே கண்டுபிடிக்கப்பட்டது. இந்த நிலப் பொந்துகள் சுமார் 29 ஆயிரம் சதுரமைல் முழுவதும் ஒரு குறிப் பிட்ட வடிவத்தில் உருவாகியுள் ளன. இந்த பொந்துகளை உரு வாக்கும் மண் புழுக்கள் மிகவும் ஆச்சரியமானவை என்றும் இவை தொடர்பான ஆய்வுகள் மேலும் தொடர்வதாகவும் விஞ் ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

## விளக்கம்

இந்த மண்புழுக்கள் அடியோர்னஸ் குடும்பத்தினைச்



சேர்ந்தவை. 1.5 மீற்றர் வரை இந்த புழுக்கள் வளரும். இவை மண்ணை அகழ்ந்து அதனுள் இருக்கும் கனியுப்புகளை உறிஞ் சிக்கொள்வதாகவும், இதனால் நிலப்பொந்துகள் உருவாவதாக வும் விஞ்ஞானிகள் விளக்கு கின்றனர்.

## வனங்களின் தெய்வம்

இப்பிரதேசவாசிகள் 'சுரேல்' என்ற பெயரில் இந்த நிலப் பொந்துகளை அழைத்தாலும் இப்பெயரை ரஷ்யாவினைச் சேர்ந்த துருக்கியர்களும் பயன்படுத்துகின்றனர். யூரல் மலைப்பகுதியில் ரஷ்யாவுக் குரிய 'பெஷ்கொரொஸ்த்தான்' என்ற பிரதேசம் ஒன்றுள்ளது. இந்த பகுதியில் டர்கிக் என்ற மக்கள் பிரிவினர் வசிக்கின்ற னர். சுரேல் என்ற வனங்களின் தெய்வம் பற்றி ஒரு கற்பனைக் கதை இங்கு பரவலாக உள்ளது. இந்த கற்பனைக் கதையின்படி, சுரேல் தெய்வம் சதுப்பு நிலம் கொண்ட வனாந்தரங்களிலேயே வாழ்வதாகவும் நம்பப்படுகிறது. இந்த தெய்வத்தின் தலையில் மாட்டின் கொம்புகள் போன்ற இரண்டு நீண்ட கொம்புகள் உள்ளன. மேலும் கை விரல் கள் மிகவும் நீண்ட தன்மை யினைக் கொண்டவை. உடல் மரத்தினைப் போன்றது. வனாந்தரத்திற்கு ஏதேனும் பாதிப்பினை ஏற்படுத்தும் மனிதர்களை அழிக்கும் சக்தியாகவே சுரேல் தெய்வம் கருதப்படுகின்றது. (இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அருகிலுள்ள சொற்களை எழுத்துக் கூட்டத்திற்குள் இனங்கண்டு நிறந்தீட்டுக

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| raft | b | p | b | i | h | t | h | b | b |
| hike | r | g | r | k | w | n | i | w | r |
| kiwi | e | l | a | z | m | f | k | j | a |
| branch | h | o | n | a | v | o | e | o | f |
| | c | g | c | p | b | n | u | p | t |
| sweater | a | v | h | j | g | q | z | t | u |
| teacher | e | c | n | z | t | i | w | i | k |
| lolipop | t | r | e | t | a | e | w | s | t |
| log | i | l | o | l | i | p | o | p | j |







## வழி காட்டுங்கள்



குறுக்கெழுத்துப் போட்டி: 196



### மேலிருந்து கீழ்

1. எலி இனத்தில் பெரியது.
2. விலங்குகளின் இளையது. (குழம்பியுள்ளது)
3. தெய்வம். (குழம்பியுள்ளது)
5. மனிதனின் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்று.
6. கிளி. (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

1. விலைமதிப்பானவற்றை பாதுகாப்பாக வைத்திருக்கப் பயன்படும்.
2. ஆசான்.(மாறியுள்ளது)
3. ஒருவகைத் தொடுகறி. (குழம்பியுள்ளது)
4. திருவள்ளுவரின் மனைவியின் பெயர். (குழம்பியுள்ளது)
5. பூண்டு. (குழம்பியுள்ளது)
6. 'அரிது' என்றும் அர்த்தப்படும். (மாறியுள்ளது)


### குறுக்கெழுத்துப் போட்டி: 195 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1பி | டி | வா | 2த | ம் | |
| ரு | | | ச் | | று |
| 3அ | ய | லா | ன் | | கா |
| | பு | | ச | | க் |
| டை | 4வி | | | 5ஏ | ழு |
| 6பு | ப் | கு | வ | ணி | 7அ |


### பொருத்தமற்ற உருவில் X அடையாளமிடுக




### இடைவெளிகளில் வர வேண்டிய வற்றைக் குறித்துக் காட்டுக



### அறிவுக்கு விருந்து (29.06.2016) விடைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு என்பது எதுவரை...



மிகச் சிறந்த நட்பைப் பெறுவது மிகப் பெரும் கொடை என்றே கூறலாம். எனினும், உறவுகள் எம்மைத் தொடர்வதுபோல் நட்புக்கள் நீண்டகாலம் எம்மைத் தொடர்வதில்லை. சிலருக்கு பாடசாலைக் காலம் முடிந்தபின் நட்புக்களும் முடிந்துவிடும். சிலருக்கு திருமணகாலம் வரை பாடசாலை நட்புக்கள் நீடிக்கின்றன.



பின்னர் புதிய உறவுகள் புதிய நட்புக்கள்... இவ்வாறே, புதிய புதிய நட்புக்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு காலகட்டத்திலும் வருவதும் போவதுமாகவே இருக்கும். இதுவே வாழ்க்கையின் இயல்புமாகும்.மிகச் சிறந்த நட்பு என்பது வாழ்க்கையின் இறுதிவரை தொடர்ந்து வரும் அளவிட முடியாத நலன்களையும் அள்ளித் தரும். தவறு செய்யும்போது கண்டித்து உரைக்கும். ஆபத்தின் போது தோளோடுதோள் நின்று உயிர் காக்கும்.

இத்தகைய அழகிய சிறந்த நட்புக்கு சோதனைகளும் வேதனைகளும் காத்திருக்கும். எனினும், உறுதியான மனமும், புரிந்துணர்வும் நட்பைக் காத்து நிற்கும். இவ்வாறே, தீய, பலவீனமான நட்புக்களும் உள்ளன. இவை ஆபத்தை நோக்கி உங்களை அழைத்துச் செல்வதுடன், அளவிட முடியாத வேதனைகளையும் துன்பங்களையும் உங்களுக்கு விட்டுச் செல்லும்.

## கைவண்ணங்கள்




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2087
கொழும்பு



மு.அபின்ஷன்,
யா/மீசாலை விக்னேஸ்வரா மகா வித்., மீசாலை.




கே.தனுஸ்குமார்,
அக்கரப்பத்தனை த.ம.வித்.,
அக்கரப்பத்தனை.




மு.சவின்சன்,
சாவகச்சேரி இந்துக் கல்.,
சாவகச்சேரி.



எஸ்.சஹானஸ்மி அஹமட்,
இ/அல்-இர்பான் மத்திய கல்.,
ஓர்பியத்த.



டயன் மேசாக்,
பரிசுத்த திருத்துவக் கல்லூரி.,
நுவரெலியா.



தி.எபநேசன்,
பரந்தன் இ.ம.வித்., கிளிநொச்சி.



எஃப்.ருகையா,
பெண்கள் உயர்தரக் கல்.,
கண்டி.



என்.கிஷானி,
கார்மேல் பாத்திமா தே.பா.ட.,
பாண்டிருப்பு.




மொகமட் இபால்,
கஹி கிரிபோபுர, ஹம்பாந்தோட்டை.



கே.ஹுஸ்னி அஹமட்,
அ/அந்நூர் மு.ம.வித்.,
ஆனைவிழுந்தான்.



சு.கபிஷாந்,
கோட்லோஜ் த.வித்.,
நுவரெலியா.

# அழகிய மயில் சிலந்தி

அண்மையில் அவுஸ்திரேலியாவின் அடர்ந்த காடுகளில் விசித்திரமான சிலந்தி இனங்கள் சில ஆய்வாளர்களால் கண்டறியப்பட்டன.



இவற்றில் 'மயில் சிலந்தி' எனும் ஒருவகை சிலந்தி ஆய்வாளர்களை மிகவும் கவர்ந்தது. சிறிய உடல் அமைப்பைக் கொண்டுள்ள இது, அழகிய வண்ண, வண்ண நிறங்களில் அழகாகக் காட்சி அளிக்கின்றது. ஏனைய சிலந்திகள் போலவே இதன் நடத்தைகள், உணவுகள் காணப்பட்ட போதிலும், இது தனது இன பெண் சிலந்தியைக் கவர்வதற்கு மிக விசித்திரமான நடைமுறைகளை கடைப்பிடிக்கின்றது.

அந்தவகையில், இவை பெண் சிலந்திகளைக் கண்டவுடன் அழகாக நடனம் ஆடுகின்றது. தனது அழகிய நிறங்களாலும் பெண் சிலந்தியை கவர முனைகின்றது.எனினும், ஆண் சிலந்தியின் இந்த நடனம் பெண் சிலந்திக்குப் பிடிக்காதபோதே விபரீதம் நிகழ்கின்றது. அதற்கமைவாக, ஆண் சிலந்தியின் நடனத்தில் தவறுகள் இருப்பின் பெண் சிலந்தி கோபம் கொண்டு ஆண் சிலந்தியின் மீது பாய்ந்து அதனை சிறிது கூட இரக்கம் இன்றி தனது இரையாக்கிவிடுகின்றது.



noolaham.org | aavanaham.org

# மாமிசம் உண்ணும் தாவரங்கள்



பூச்சிகளை இரையாக்குவதன் மூலம் தமது நைதரசன் மற்றும் பொஸ்பரஸ் போன்ற மூலப்பொருட்களின் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ளும் தாவர வகைகள் சில உலகில் உள்ளன. இவற்றை 'மாமிச உண்ணித் தாவரங்கள்' என அழைப்பர். இவை வளமற்ற மண் மற்றும் நீர் தேங்கி நிற்கும் பகுதிகளில் பெரும்பாலும் வளர்கின்றன.

## செரசீனியா
## Sarracenia

'செரசீனியா' எனும் தாவரத்தில் உள்ள புனலின் வாயில் அமைந்துள்ள மின்னும் தேன்துளிகளுக்கு பூச்சிகள் கவரப்பட்டு அத்தாவரப் புனலின் உள்ளே வழுக்கி விழுகின்றன. புனலுக்குள் வாழும் பற்றீரியாக்களின் நொதியங்கள் மூலம் உள்ளே விழும் பூச்சிகளை இத்தாவரம் ஜீரணித்து விடுகின்றது.



## குடுவையுருத் தாவரம்
## Nepenthes

முக்கியமான ஒரு மாமிச உண்ணித் தாவரமாகும். இதன் பூவின் இதழ் ஒடுங்கிய நீளமான குடுவை போல் இருக்கும்.

இக்குடுவையில் உள்ள மின்னும் திரவத் துளிகளால் கவரப்படும் பூச்சிகள், அக்குடுவையினுள் வழுக்கி விழுகின்றன. குடுவையின் அடியில் உள்ள நார்கள் காரணமாக, பூவினுள் விழும் பூச்சிக்கு அதிலிருந்து வெளியே வர முடிவதில்லை. பூவின் அடியில் உள்ள சமிபாட்டு நொதியங்கள் மூலம் பூச்சிகளின் சாற்றை தாவரம் உறிஞ்சிக்கொள்கின்றது.



## வில்பொறி
## Venus fly trap or Dionaea

இரட்டை இதழ்களைக் கொண்ட இந்த மலரின் ஓரத்தில் 12 முதல் 20 வரையான முட்கள் காணப்படுகின்றன. இவற்றில் ஸ்பரிச உணர்வு நார்கள் காணப்படும். அந்த நார்களில் பூச்சிகள் மோதியதும் அந்த இரட்டை இதழ்கள் மூடி பூச்சியை சிறைப்பிடிக்கும். இதன் பின்னர் இதழின் மேற்பாகத்தில் உள்ள நொதியங்கள் மூலம் பூச்சி சமிபாடடைந்து தாவரத்திற்குத் தேவையான போஷாக்கினை பெற்றுக்கொள்ளும்.



## பனிப்பூண்டு
## Drosera Indica



நீளமானதும் நுனியில் சுருண்டும் காணப்படும் இத்தாவரத்தின் இதழ்களில் ஒட்டும் தன்மை காணப்படுகின்றது. இவ்விதழ்களில் பூச்சிகள் ஒட்டியவுடன் இதழ்கள் உள்நோக்கிச் சுருண்டு அவற்றைப் பிடித்து தனது சுரப்பிகள்மூலம் ஜீரணித்துக்கொள்கின்றன.

## சுண்டெலிக் கூண்டு
## Utricularia



மரக்கிளைகளின் இடையில் தேங்கி நிற்கும் நீரில் வளரும் தாவரம் இதுவாகும். இத்தாவரத்தில் நுண்ணிய இலைகள் உண்டு. அதன் நுனியில் கொடுக்குகள் போல் உள்ள பகுதியில் பூச்சிகள் மோதியவுடன், கொடுக்கு விரிவடைந்து பூச்சியை உள்ளே இழுக்கும். பின்னர் இத்தாவரத்தினுள்ள சமிபாட்டுச் சுரப்பிகள் மூலம் பூச்சிகளின் சாற்றை தாவரம் உறிஞ்சிக்கொள்ளும்.

## அழுகண்ணி
## Drosera burmannii



அழுகண்ணி என்பது ஓர் அரிதான மூலிகை இனத்தைச் சேர்ந்த தாவரமாகும். இவற்றின் மலர்கள் பல இதழ்களுடன் வட்ட வடிவமாக மலரும். மலர் இதழ்களின் மேற்பகுதியில் ஒட்டும் தன்மையுள்ள மின்னும் ஒருவகை திரவம் உள்ளது. இவ்விதழ்களில் சிறிய உயிரினங்கள் மோதியவுடன், இந்த மலர் இதழ்கள் மோதுண்ட உயிரினத்தை நோக்கி வளைந்து அந்த உயிரினத்தைப் பிடிக்கும். பின்னர் இம்மலரில் சுரப்பிகளில் இருந்து 'பெப்சீன்' என்ற நொதியம் சுரந்து அந்த உயிரினங்களை ஜீரணித்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்பேனியா

தென் கிழக்கு ஐரோப்பாவில் அமைந்துள்ள அல்பேனியா நாட்டின் வரலாறு கி.மு.4 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட யுகத்திற்குரியது. ஒட்டோமன் பேரரசின் ஒரு பகுதியான அல்பேனியா கி.பி 1912 ஆம் ஆண்டில் சுதந்திரம் அடைந்தது. பல்வேறு ஆட்சியாளர்களுக்கு அடிபணிந்த அல்பேனியா, 1939 இல் இத்தாலிக்கு உரித்தனது. தற்போதைய இங்குள்ள அரசியலமைப்பானது, 1998 இல் உருவாக்கப்பட்டது.

போல்கன் மக்களே முதல் குடிகளாவர்.

**தேசிய பறவையும் மலரும்**
தேசிய பறவை - பொன் பருந்து
தேசிய மலர் - சிவப்பு பொப்பி மலர்

அன்னை திரேஸா அல்பேனிய இனத்தவராவார்

**அரசியல்**
அல்பேனிய நாடாளுமன்றம்
பிரதமர் - எடி ராமா

**இனங்கள்**
82.6% அல்பேனியர்
0.9% கிரேக்கர்
01% ஏனையோர்
15.5% இனம் குறிப்பிடாதோர்

**மொழி** அல்பேனியன் 98.8%, கிரேக்க மொழி 0.5%, ஏனைய மொழிகள் 0.6%, குறிப்பிடாதவை 0.1%

**சமயம்** இஸ்லாமியர் 56.7%, உரோமன் கத்தோலிக்கர் 10%, ஓர்த்தடொக்ஸ் கிறிஸ்தவம் 6.8%, நாஸ்திகம் 2.5%, ஏனையவை 7.8%, குறிப்பிடாதவை16.2%

**இயற்கை வளம்** பெற்றோலியம், இயற்கை வாயு, நிலக்கரி, செம்பு, பொக்சைட், க்ரோமைட், இரும்பு, நிக்கல்

டொஸ்க்ஸ் எனும் தென் அல்பேனிய இனத்தவர் ஒருவர்

'கெக்ஸ்' எனப்படும் வட அல்பேனிய இனத்தவர்கள்.

இங்கு ஷுகும்பின் எனும் நதி ஓடுகின்றது.

நாணயம்- லெக்

பாரம்பரிய உடை ஒன்று.

**தலைநகரமும் பெரிய நகரமும்**

ஒட்டோமன் ஆட்சிக் காலத்தில் முக்கிய சம்பவங்கள் பல நிகழ்ந்துள்ளன.

பாரம்பரிய நடனம்.

விவசாயம் முக்கிய வருவாய்த் துறை ஆகும்.

காய் கறிகள், பழவகைகள் மற்றும் தானியங்கள் பயிரிடப்படுகின்றன.

மீன்பிடிக் கைத்தொழில் வளம்மிக்க நாடு.




இயற்கை மசகு எண்ணெய் வளம் ஓரளவு உண்டு.

மொத்த நிலப்பரப்பு - ச.கி.மீற்றர்
27,398 $km^2$

மொத்த சனத்தொகை
3,029,278

க்ரோமைட் கனியங்களைப் பெறும் பல சுரங்கங்கள் உண்டு.

காலணி உற்பத்தி இடம்பெறுகின்றது.

சீமேந்து கைத் தொழிற் சாலை.

ஓர்த்தடொக்ஸ் கிறிஸ்தவ தேவாலயம்.

சுற்றுலாத் துறைக்கான பல இடங்கள் இங்குண்டு.

உணவுத் தேவைக்காக கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன.

உங்கள் அபிமான
தமிழ்Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
விலை Rs.10/=
தினசரி தேசிய பத்திரிகையாக வெளிவருகிறது
wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ்Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் தமிழ் சான்றோர்கள்

# தனிநாயகம் அடிகளார்



உலக நாடுகள் எங்கும் பல மாநாடுகளில் தமது உரையாற்றல் மூலம் தமிழ் மொழியை உலகறியச் செய்தவர்தான் தனிநாயகம் அடிகளாராவார். இவர் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த கரம்பொன் எனும் கிராமத்தில் 1913 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 2 ஆம் திகதியன்று ஸ்டனிஸ்லஸ் கணபதிப்பிள்ளை, செசில் இராசம்மா பஸ்தியாம்பிள்ளை ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்.

இவர் ஆரம்பக் கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை 1920 முதல் 1922 வரை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும், கொழும்பில் சென்ட் பேர்னாட் செமினறியில் தத்துவவியலில் கலைமாணிப் பட்டத்தையும், தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தையும் M.Litt பட்டத்தையும் பின்னர் லண்டனில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றார். இவர் பல உலக மொழிகளையும் கற்றுத் தேர்ந்ததோடு, பல நாடுகளில் சமய திருப்பணிகளையும் தமிழ் பணிகளையும் ஆற்றினார். இவை மட்டுமல்லாது இதழியல் ஆசிரியராகவும் தொண்டாற்றியுள்ளார். இவர் தூத்துக்குடியில் பணியாற்றிய போது, தமிழ் இலக்கியக் கழகம் என்ற அமைப்பை நிறுவி அதன் மூலம் Tamil Culture (தமிழ்க் கலாச்சாரம்) என்னும் ஆங்கிலக் காலாண்டு இதழை ஆரம்பித்தார். அதன் ஆசிரியராகவும் சிறிதுகாலம் பணிபுரிந்தார். இந்த சஞ்சிகை தமிழ்நாட்டில் மட்டுமல்லாது அமெரிக்கா, ஐரோப்பிய பல்கலைக்கழகங்கள் வரை சென்றடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதி வெளியிட்ட இவர் 'தமிழ்த் தூது' என்ற நூல் அடங்கலாக மொத்தம் 137 நூல்களை எழுதினார். உலக தமிழாராய்ச்சி நிறுவன தோற்றுநராக தனிநாயகம் அடிகளாரும் ஒருவராகத் திகழ்ந்தார். இவர் மலேசியாவில் பணிபுரியும் காலத்தில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தோற்றுநர்களில் ஒருவராகவும் இருந்து செயற்பட்டார். அதன் முதலாவது மாநாட்டினை 1966, ஏப்ரல் 16-23 திகதிகளில் மலேசிய அரசின் துணையோடு பிரமாண்டமான முறையில் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடத்தினார்.

பன்னாட்டு ரீதியில் தமிழ் மொழியை உலகறியச் செய்ய முடியும் என தன்னம்பிக்கையோடு 'Reference Guide to Tamil Studies' என்ற நூலை வெளியிட்டார். இந்நூல் பல மொழிகளில் வெளியாகியது. இவ்வாறு எண்ணற்ற தொண்டுகளை தமிழ் மொழிக்கு ஆற்றிய தனிநாயகம் அடிகள் 1980 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 1 ஆம் திகதி இவ்வுலகை விட்டு நீங்கினார்.

## தெரிந்து கொள்வோம்



★ உலகின் முதலாவது பெண் ஜனாதிபதி யார்? அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

இஸ்பேல் மர்டினேஸ் - ஆர்ஜன்டினா



★ கரப்பந்தாட்டத்தை அறிமுகப்படுத்தியவர் யார்? அது எப்போது, எந்த நாட்டில் அறிமுகமானது?

வில்லியம்ஸ் ஜீ மோர்கன், 1895ஆம் ஆண்டு, ஐக்கிய அமெரிக்காவில் அறிமுகமானது

★ அதிகளவு அறிவாற்றலைக் கொண்ட விலங்கினம் எது?

போட்டில்நோஸ் டொல்ஃபின்



★ நைஜீரியாவின் தலைநகர் எது?

அபூஜா



★ உலகில் மிகப் பெரிய புத்தகம் எது? அதன் அளவுகள் யாவை?

Bhutan: A Visual Odyssey Across the Kingdom
133 இறாத்தல் நிறையும், 5 அடி 7 அங்குலம் நீளத்துடன் 112 பக்கங்கள் கொண்டது



★ இலங்கைப் பரீட்சை திணைக்களத்தால் நடத்தப்படும் பரீட்சைகளில் ஆகக்கூடிய பரீட்சாத்திகள் தோற்றிய பரீட்சை எது? அது எத்தனையாம் ஆண்டு இடம்பெற்றது? எத்தனை பரீட்சாத்திகள் தோன்றினர்?

க.பொ.த (சாதாரண) பரீட்சை - 2015. 6 இலட்சத்து 64 ஆயிரத்து 537 பரீட்சார்த்திகள்

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

## உலகில் பிரபல்யமானவர்கள்

# ஜீம்போ வேல்ஸ்

### 'விக்கிபீடியா'வை உருவாக்கியவர் இவரே...



ஜிம்மி டொனால்ட் ஜீம்போ வேல்ஸ் என முழுப் பெயரால் அழைக்கப்படுபவர் தான் ஜீம்போ வேல்ஸ் ஆவார். இவர் 1966 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி அமெரிக்காவின் அலபாமா மாநிலத்தில் பிறந்தார். இவரது தாயார் நடாத்திய தனியார் பாடசாலையில் தமது ஆரம்பக் கல்வியினை இவர் மேற்கொண்டார்.

இவரின் தந்தை ஜீம்மி, தாயார் டொறிஸ் ஆகிய இருவரும் இரு வேறு நிறுவனங்களை நிருவகித்தமையால் இவருக்கும் இயல்பாகவே நிறுவனங்களை நிருவகிக்கும் ஆற்றல் காணப்பட்டது. அந்தவகையில், 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 திகதியன்று இவர் 'விக்கிபீடியா' என்னும் கலைக் களஞ்சியத்தை உருவாக்கினார்.

விக்கிபீடியா என்பது, இலாப நோக்கற்ற விக்கிமீடியா நிறுவனத்தின் உதவியுடன் கூட்டாகத் தொகுக்கப்படும், பன்மொழி, கட்டற்ற இணையக் கலைக்களஞ்சியமாகும். இதன் மொத்தக் கட்டுரைகளான 24 மில்லியன் கட்டுரைகளும் உலகெங்கிலுமுள்ள தன்னார்வலர்களால் கூட்டாக எழுதப்படுகின்றன. இது கிட்டத்தட்ட 100,000 முனைப்பான பங்களிப்பாளர்களையும் கொண்டுள்ளது. ஜூலை 2016 வரையில், விக்கிபீடியா 285 மொழிகளில் செயற்படுகிறது. இது இணையத்தளத்தில் இயங்கும் உசாத்துணைப் பகுதிகளிலேயே மிகவும் பிரபலமான ஒன்றுமாகும். மேலும், இது அலெக்சா இணையத்தளத்தில் காணப்படும் இணையத்தளங்களின் தரவரிசையில் ஆறாவது இடத்தில் உள்ளதோடு, உலகளாவிய ரீதியில் அண்ணளவாக 365 மில்லியன் வாசகர்களையும் கொண்டுள்ளது.

இதன் ஸ்தாபகராகவும் வேறு பல விக்கித் திட்டங்களை முன்னின்று நடாத்துபவரும் இவராவார். இவரின் திட்டங்களால் அதிகமானோர் நன்மை பெற்றுவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு: ஜுனைட் எம்.பஹ்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PERIODICAL
JAFFNA PUBLIC LIBRARY



# தொப்பியின் பயன்பாடு



அழகுக்காகவும் வெயில், தூசு, மழைத் தூறல் என்பனவற்றிலிருந்து பாதுகாப்பதற்காகவும் தலையில் அணியப்படும் ஒருவகை தலைக்கவசமே 'தொப்பி' ஆகும்.தொப்பிகளில் பல வகைகளும் வடிவங்களும் உள்ளன. பண்டைய கால தகவலொன்றின்படி, வெண்கல யுகத்தில் வாழ்ந்த மனிதனே முதன்முதலில் தொப்பியைப் பயன்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பண்டைய எகிப்து, கிரேக்கம் மற்றும் ரோமானிய நாகரிக காலத்தில் தொப்பி அணிவதென்பது, அந்தஸ்தின் அடையாளமாகக் கருதப்பட்டுள்ளது. தொப்பிகள் தயாரிப்புத் தொழிற்சாலை, முதன்முதலில் 1857 ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



# முயல் தீவு



ஜப்பானின் ஒகுனோஷிமா எனும் தீவு, முயல்களின் சரணாலயமாக மாறியிருக்கின்றது. இந்த தீவிற்கு 'Rabbit Island'(முயல் தீவு) என்று பெயரிட்டுள்ளனர். நூற்றுக்கணக்கான முயல்கள் இங்கு வாழ்ந்து வருகின்றன.



இந்த தீவுப் பகுதிக்கு தினமும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். அவர்கள் கெரட், கீரை வகைகள், அப்பிள், வாழைப்பழம், விதை வகைகள் என்பனவற்றை எடுத்துவந்து இங்குள்ள முயல்களுக்கு வழங்குகின்றனர். இதனால், இங்குள்ள முயல்கள் மனிதர்களிடம் மிகவும் நெருக்கமாக இருக்கின்றன. இந்த தீவில் முயல்கள் இருக்கும் பகுதிக்குச் சென்றால், அங்கு செல்பவர்களை நூற்றுக் கணக்கான முயல்கள் சூழ்ந்து கொள்கின்றன. அவர்கள் மீதேறி அங்கும் இங்கும் ஓடி மகிழ்கின்றன.

# பாலைவன மழை







பொதுவாக, பாலைவனத்தில் அதிக அளவில் வெப்பம் நிலவுவதாக இருந்தாலும், அந்தப் பகுதிகளிலும் எப்போதாவது மழை பெய்யத்தான் செய்கிறது. உலகின் மிகப் பெரிய பாலைவனமான சஹாராவில்கூட ஒவ்வொரு வருடமும் சராசரியாக 100 மில்லிமீற்றர் - 250 மில்லிமீற்றர் அளவுக்கு மழை பெய்வதாக கூறப்படுகின்றது. ஆனால், அந்த மழை ஒரே நேரத்தில் பாலைவனம் முழுவதும் பெய்வதில்லை. பாலைவனத்தின் ஒரு பகுதியில் மழை பெய்ய, இன்னொரு பகுதியில் தொடர்ச்சியாக 10 ஆண்டுகள் வரை ஒரு துளி மழைகூட கிடைக்காத காலங்களும் இருக்கின்றன.

உலகின் மிகப் பெரிய பாலைவனமான சஹாராவில் மழைவீழ்ச்சி இவ்வாறிருக்க, உலகின் மிகவும் வறண்ட பாலைவனமாக கருதப்படுகின்ற சிலி நாட்டில் அமைந்துள்ள அட்டகாமா பாலைவனத்தில் வருடமொன்றுக்கு 15 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியே கிடைக்கின்றது. அதுவும் இந்த பாலைவனத்திற்கு உட்பட்ட அரிகா மற்றும் ஈகிகே போன்ற துறைமுக நகரங்களுக்கு வருடாந்தம் 1-3 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியே கிடைக்கின்றது. குறிப்பாக, 1931 ஆம் ஆண்டிலிருந்து 1960 ஆம் ஆண்டுவரை சுமார் 29 ஆண்டுகளாக அரிகா பகுதியில் ஒரு துளி மழையேனும் பொழியவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இவ்வார கார்ட்டூன் படம்





இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2016, ஜூலை 13 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday July 13, 2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org